போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு	ரூ.	6	8	0
6 மாதம்	ரூ.	3	4	0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 15
30—12—50 சனிக்கிழமை

வீச்சு 18

மகத்தான மரணம்—மூடநம்பிக்கையின் பரிசு!



"ஒரிசா மாகாணத்தில் உள்ள ராந்தலை என்ற கிராமத்தில் நேபால் பாபா என்னும் படிப்பறியாப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் தரும் "தெய்வீக" மூலிகை சர்வரோக நிவாரணியாக இருக்கிறது என்று எத்தர்கள் யாரோ கட்டிவிட்ட பித்துப் பிள்ளைக் கதையை நம்பி, அங்குக் கூட்டம் கூட்டமாகத் திரண்டு சென்ற ஆயிரமாயிரம் ஏமாளிகளில் ஓராயிரவருக்கு மேல் ப்ளேக் நோயால் தாக்குண்டு மாண்டு மறைந்து போயினர்."

—பத்திரிகைச் செய்தி.

நாணிட வேண்டும்!

[நா. நிலத்தலைவன்]

ஒரு நாட்டு மக்களைக் கல்வியுள்ளவர்களாகச் செய்வது அந்த நாட்டு அரசாங்கத்தின் இன்றியமையாத கடமைகளுள் தலையாய கடமையாகும். மனிதர்களாக வாழச்செய்யக் கல்வி அவசியம் என்பதைப் பற்றி 20-வது நூற்றாண்டில் எடுத்து விளக்கிக் கூறுவது வீண்வேலையாகும். மானிடரிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லாமலிருக்க, அடிப்படைக் கல்வி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று அரிஸ்டாட்டில் முதற்கொண்டு வள்ளுவர் வரை கூறியுள்ளனர். நம்நாடு கல்வித் துறையில் எவ்வளவு அளவிற்கு முன்னேறியுள்ளது — என்பதைச் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை; சோகக்கதை அல்லவா அது? தமிழ் நாட்டில் பலகோடி மக்கள், படிப்பு வாசனையையும் அறிந்திராமல், அறிய ஆவலிருந்தும் பணவசதியில்லாமல், கல்லூரிகளில் இடம் கிடைக்காமல், தாங்கள் விரும்பும் பாடம் கிடைக்காமல் பலப்பல விதமான இன்னல்களைக் கல்வித் துறையில் அனுபவித்து வருகின்றனர் என்பதைக் கண் கூடாகக் கண்டுவருகிறோம். ஓரளவிற்குக் கல்வி பெற நம்மவர் முன் வந்துள்ள இந்த நாளில் நமக்குப் பெருந்துணை புரிந்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையும் வஞ்சகர் சூழ்ச்சியால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பிறநாடுகளில் கல்வி எவ்வாறு மக்களுக்கு அளிக்கப்படுகிறது. அதில் அரசினரின் பங்கு எத்தனை அளவு முதலியவைகளை அறிந்துகொள்வது அறிவுக்கு விருந்தளிக்கும்.

'எளிமையினால் ஒருதமிழன்
படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும்
நாணிடவும் வேண்டும்'

என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஒரு தமிழனுக்கு மட்டுமா படிப்பில்லை? கோடிக்கணக்கான தமிழர்களுக்குப் படிப்பு இன்னதென்றே தெரியாது. பணவசதி இல்லாத காரணத்தால் படிக்க முடியாமல் தற்குறியாக வாழ்வு நடத்தும் தமிழர் லட்சக் கணக்கில் இருக்கின்றனர். நாட்டு மக்களுக்கு இலவச ஆரம்பக் கல்விகூடத் தரப்படாத நாடு இந்த நாடல்லவா? அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையான கல்வி அளித்தல் இங்கு எப்படி ஆற்றப்படுகிறது என்பதை விளக்க வேண்டியதில்லை. நாட்டு மக்களின் வரிப்பணம் எப்படிச் செலவு செய்யப்படுகிறது என்பதைக்கூட அறியாத மக்கள் நிறைந்துள்ள இந்த நாட்டின் வரிப்பணத்தில் பெரும்பாகத்தை இராணுவச் செலவு விழுங்கி விடுவது கூட அவ்வளவு விந்தை அல்ல...அஹிம்சை வழி நடக்கும் அரசாங்கம் என்று அவனியில் முரசுகொட்டிக் கொண்டு ஆளும் இந்த அரசினர் வரிப்பணத்தில் பெரும் பங்கை இராணுவத்திற்குச் செலவு செய்வதுதான் புதிராகப் பொலிகிறது. இராணுவம் இருக்க வேண்டியது அவசியந்தான்; கப்பற்படை, விமானப் படை அவசியமே. ஆனால் அதற்காகப் பெரும் பணமா?...

நம்நாட்டு அரசாங்கம் கல்வியின் பொருட்டு எவ்வளவு செலவு செய்கிறது, பிறநாடுகள் எவ்வளவு செலவு செய்கின்றன?

1916-19-ல் ஒரு மனிதனுக்கு இந்தியாவில் 7-அணா விதம் கல்விக்குச் செலவு செய்யப்பட்டது. அதே சமயத்தில் இங்கிலாந்தில் ஒரு மனிதனுக்கு ரூ. 38, கனடாவில் ரூ. 104, அமெரிக்காவில் ரூ. 114, ஜப்பானில் ரூ. 13 விதம் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் மாகாணவாரியாகப் பார்த்தாலும், குறைந்த அளவில்தான் கல்விச் செலவு காட்சியளிக்கிறது. புள்ளி விவரம் தருபவர் சாதாரண மனிதரல்ல; இந்திய அரசினருக்குப் பொருளாதார ஆலோசகராக இருந்த டாக்டர் P. J. தாமஸ் என்பவர்தாம் பின்வருமாறு விவரம் திரட்டியுள்ளார். ஒரு மனிதனுக்குக் கல்வியின் பொருட்டு பின்வருமாறு 1929-30-ல் செலவு செய்யப்பட்டது.

சென்னை—ரூ.	0	9	9
பம்பாய்—ரூ.	1	1	0
வங்காளம்—ரூ.	0	4	6
ஐ. மா—ரூ.	0	6	9
பஞ்சாப்—ரூ.	0	13	0
பீஹார் & ஒரிஸ்ஸா—ரூ.	0	4	2
ம. மா—ரூ	0	6	6
அஸ்ஸாம்—ரூ.	0	6	9

எப்படியிருக்கிறது, பார்த்தீர்களா? எல்லாம் அணா, பைசா விவகாரமாகத்தான் காட்சியளிக்கின்றன! விகாரமாக அல்லவா இருக்கிறது இந்த விவரம்?

(7-ம் பக்கம் பார்க்க)

கொலைதான் புரிந்தான்!

ஆனால்

கொலைகாரனல்ல!

"நடுநிலை தவறா நெறியுடைய (நீ)திபதி அவர்களே!

"சட்ட நுணுக்கங்களை ஆய்ந்(து)ந்து பயின்ற அரிய வழக்(கறி)ஞர்களே!

"அடக்க முடியாத ஆவல் (கா)ரணமாக ஓடோடி வந்திருக்(கு)ம் திரளான பொது மக்களே!

"உங்கள் அனைவரையும் பார்த்துத்தான் கூறுகிறேன்—நான் கொலை புரிந்தது உண்மை.

"சுற்றி வளைத்துப் பேச (வி)ருப்பமில்லை. வார்த்தைகளிற் (கு)ழைவு நெளிவுகளைக் காட்ட(வு)ம் எண்ணமில்லை. வெளிப்(ப)டையாகவும் அழுத்தந்திருத்த(மா)கவும் கூறுகிறேன்—நான் (நா)ன் கொலை புரிந்தேன்—(இ)திலே யாருக்கும் ஐயம் துளி(யு)ம் இருக்கத் தேவையில்லை.

"கொலை! நினைத்துப் பார்த்(த)ாலே நெஞ்சத்தைப் பதற (வை)க்கும் செயல்! பஞ்சமா(பா)தகங்களில் தலையாயதுஎன்று (பெ)ரியவர்களால் பழித்துரைக்(க)ப்பட்ட பாழும் செயல்! நாக(ரி)க உணர்ச்சி துளியளவு படைத்(த)வர்களும் வெறுத்து ஒதுக்கும் (அ)றக்கொடிய செயல்! ஆமாம்! (ஆ)னால் அந்தச் செயலைத்தான் (நா)ன் புரிந்திருக்கிறேன்.

"சொல்லவே எனக்கு வெட்(க)மாக இருக்கிறது—சொல்லத் (தொ)டங்கும்போதே அவமா(ன)ம், நெஞ்சை அடைக்கிறது—(எ)ன்றாலும் நான் சொல்லித் (தா)னகவேண்டும் — சொல்வது (தா)ன் முறை—நான் புரிந்திருப்(ப)து ஒரு கொலை அல்ல இரண்டு (கொ)லை!

"கொல்வதுதான் கொன்றேனே—யாரைக் கொன்றேன் தெரியுமா? கட்டிளங்காளைகள் எனத்தகும் நிலையினரையா? இல்லை! எதிர்த்துத் தாக்கக் கூடிய உள்ள உரமும் உறுதியும் படைத்தவர்களையா? இல்லை! அஞ்சா நெஞ்சமும் அளவற்ற ஆற்றலும் படைத்த முரடர்களையா? இல்லை இல்லை—அவர்களையெல்லாம் அல்ல நான் கொலை செய்தது!

"என் அரிவாளால் படுகாயப்பட்டு செங்குருதி வெள்ளத்தை ஓடவிட்டு மாண்டு மறைந்தவர்கள் முரடர்களுமல்ல — உடல் உறுதி படைத்தவர்களுமல்ல—உள்ள உரம் வாய்ந்தவர்களுமல்ல—இரண்டு குழந்தைகள்!

"அன்றலர்ந்த செந்தாமரை போன்ற பச்சிளங் குழந்தைகள் அவை! அவற்றைக் காண்பவர் எவரும் அள்ளியெடுத்து முத்தமிட்டு செல்வக் குழந்தைகளே நீவிர் வாழ்க வாழ்கஎன்றுதான் இன்பமொழி புகலப் பெரிதும் விரும்புவர்! ஆனால் நானோ — கொடுமை கொடுமை — அந்த முல்லை மொக்குகள் இரண்டையும் கிள்ளி எறியும் அக்ரமத்தைச்செய்துமுடித்திருக்கிறேன்!

"கேட்கவே சகிக்காத கோரம் இது என்பீர்கள்! யாராலும் பொறுக்கமுடியாத அக்கிரமம் என்பீர்கள்! எங்குமே கேட்டிராத பாதகம் என்பீர்கள்! நீங்கள் மட்டுமா—மனித உள்ளம் படைத்த யாருமே அப்படித்தான் கூறுவார்கள் — யாருமே என்பதென்ன—நானே கூட அப்படித்தான் கூறுகிறேன்—நான் புரிந்திருப்பது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம்—இல்லை என்று நான் கூறவில்லை.

"அட பாதகா! பச்சிளங் குழந்தைகளைக் கொன்றாயே பாவி! ஊரார் பிள்ளைகளாக இருக்கவேதானே ஈவு இரக்கமின்றி அப்படிச் செய்தாய்! உன் பிள்ளைகளாக இருந்தால் செய்திருப்பாயா அப்படி என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு! ஆனால் நடந்த நிகழ்ச்சி உங்களுக்குத் தெரியாது—தெரிந்தால் அப்படிக் கேட்க எண்ணமாட்டீர்கள் — நான் கொலை புரிந்தது, ஊரார் பிள்ளைகளை அல்ல! என் பிள்ளைகளைத்தான்! — நான் பெற்றெடுத்த பெறற்கரிய செல்வங்களைத்தான்!

"உன் பிள்ளைகளையா கொன்றாய்? அட அக்ரமக்காரா உனக்கு இருதயம் என்பதே கிடையாதா? அல்லது உன் இருதயம், ஈவு இரக்கம் இரண்டுமற்ற வெறும் பாலைவனமா? ஏடா மூடா ஏனடா இக்கொடுமை புரிந்தாய்? என்று கொதித்தெழுந்து கேட்பீர்கள் நீங்கள்.

"இரக்கம் என்னும் ஓர் பொருள் இலா அரக்கன்"

"இரக்கம் — அப்படி என்றால் என்ன என்பதையே அறியாத கொலைகாரன்"

"இரக்கம்-அந்தப் பொருள் எந்தக் கடையில் என்ன விலைக்

(6-ம் பக்கம் பார்க்க)

தொடர் நாடகம்.

திலோத்தமா

தீட்டியது:—கு. தனபாலன்.

அங்கம் 5

இடம்: அரசனின் ஏகாந்த அறை.

[அரசனும், மந்திரியும் பேசிக் கொண்டிருக்கின்றனர்]

அரசன் முகில்வண்ணன்: அறிவிலிகள்.........அயோக்கியர்கள்..........அநியாயமாய் ஒருவன்மேல் பழி சுமத்த என்ன நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் அவர்களுக்கு?

அமைச்சர் மணிவேலர்: அது அவர்களது வர்க்கத்தினருக்கே உரியதுதானே அரசே!

முகில்: இருந்தாலும்....... இப்படியா? ஹூம்......மணிவேலரே, நான் நேற்று சொன்னேனே அதன்படி ஏற்பாடு செய்தீர்களா?

மணி: செய்துவிட்டேன் அரசே....அருணன் எந்தப் பிராணிக்கும் தெரியாமல் இன்னும் சிறிது நேரத்தில் இங்கு அழைத்து வரப்படுவான்!

[ஒரு காவலாளி வந்து வணங்கி அருணனின் வருகையைப் பணிவுடன் அறிவிக்கிறான்]

காவலாளி: அரசே, அருணன் என்பவர் தங்களைக் காண வந்திருக்கின்றார்.

அரசன் முகில்: மரியாதையுடன் இங்கழைத்துவா.

காவ: உத்திரவு.

(வணங்கிச் செல்கிறான், சிறிது நேரத்தில் அருணன் வந்து வணங்கி நிற்கிறான்)

அருணன்: அரசே வணக்கம்! என்னைத்தாங்கள் அழைத்த விஷயம்...?

முகில்: (அவனை அன்புடன் தடவிக்கொடுத்து) அருணா! நான் உண்மையிலேயே பூரிப்படைகின்றேன் உன்னைப் பற்றி! தமிழ் மரபினரின் மாணிக்கமே, நீ மட்டும் மிகுந்த சாக்ரதையாய் இருக்கவேண்டும் எந்த நேரமும்!

அரு: எதற்காக மகாராஜா?

முகில்: எதற்கா....அருணா, சாவை அணைத்துக்கொள்ள நீயே அச்சாரம் தருவது போன்றது நீ தற்போது நாட்டில் பிரசாரம் புரிந்து வருவது. இனிமேல்தானிருக்கின்றன உனக்கு வரும் அல்லல்கள். அவைகள் மேகக் கூட்டங்களைப்போல் தலைமீது கவிழ்ந்திருக்கின்றன. எப்போது இடியும் மின்னலும் சேர்ந்த மழையாகப் பொழியுமென்று எவருக்கும் தெரியாது......என்ன, புரியவில்லையா? புரியும்படி சொல்கிறேன் கேள்...! பிராமணீயம் இனி சும்மா இராது. உன்னை அழிக்கும்வரை அது அயராது. உனக்கெதிராக சமயம் வரும்போதெல்லாம் பாமர மக்களைக் கிளப்பி விட்டுக் கொண்டே இருக்கும். ஆகவேதான் நான் உன்னை எச்சரிக்கின்றேன்.

அரு: அரசே, இந்த வாள், என்னைவிட்டு நீங்காதிருக்கும் வரையில் எனக்கு எந்தவிதமான பயமும் கிடையாது.

முகில்: தம்பி.....வீரத்தால் சாதிப்பதைவிட விவேகத்தால் சாதிப்பதுதான் சிறந்தது. ஆயுதப்படை இக் காலத்திற்கு, ஏன்.... வருங்காலத்திற்குக்கூட அவ்வளவு அவசியமானதாக இருக்காது. அறிவுப்படை ஒன்றினால்தான் இச் சமயக் குழிகளையும், பாழடைந்த பிராமணீயத்தையும் இருந்த இடம் தெரியாது மண்மூடிப் போகச் செய்ய முடியும்....என் மணிவேலரே...!

மணிவேலர்: முற்றிலும் உண்மை மகாராஜா!

முகில்: தம்பி, நீ யாதொரு பயமுமின்றி உன்னாலானவரை பகுத்தறிவுப் பிரசாரம் செய்துவா. வைதீகம் இந்த வையத்திலேயே இல்லாதபடி செய்ய முடியுமானால்கூட செய்துவிடு. உனக்கு வேண்டிய மறைமுகமான எல்லாவிதமான உதவிகளையும் மணிவேலர் செய்து தருவார். நீ வேண்டியவற்றைப் பெறவும், நினைத்தபோது அமைச்சரை இரகசியமாகக் காணவும் விரும்பினால் இந்தக் கணையாழியைக் காவலாளியிடம் காட்டு. நீ விரும்பும் வண்ணம் அவர்கள் நடந்து கொள்வார்கள்.

(அருணன் கணையாழியை அரசரிடமிருந்து மரியாதையாகப் பெற்றுக்கொள்ளுகின்றான்)

சரி, நீ போகலாம்...!

(அருணன் வணங்கிச் செல்லுகிறான்)

முகில்: ஆஹா, நல்ல துடிப்பும், ஆரியத்தை எதிர்க்கும் துணிவும் உள்ள இத்தகைய இளைஞர்கள் ஒரு நூறுபேர் இருந்தால் போதும்......பகுத்தறிவு மணம் முல்லைநாட்டில் மட்டுமல்ல, மற்ற நாட்டிலும் பரவ என்ன தடை?

மணி: சந்தேகமின்றி...!

அங்கம் 6

இடம்: இராஜகுருவின் அரண்மனை.

[கருநாகனும் ராஜகுரு ஆலவாயரும் சதிசெய்ய திட்டம் தீட்டுகின்றனர். அரசி அஞ்சனாவும் அதில் கலந்துகொள்ளுகின்றாள்]

ஆல: சந்தேகமின்று அவன் தொலையத்தான் வேண்டும்! ன்ன கருநாகா, நான் சொன்னதெல்லாம் நினைவி ருக்கின்றதா?

கரு: மறப்பேனா ஸ்வாமி... னால் மகாராணியைப்பற்றி.....

ஆல: கவலையே வேண் ாம். நான் உயிர். அவள் டல். இரண்டும் சேர்ந்து ான் இக்காரியத்தை செய் ன்றன. உயிரில்லாவிட்டால் டல் இயங்காது. அப்படியே டலில்லாவிட்டால் உயிருக்கு கத்துவம் இல்லை. ஆகவே யாதொரு கவலையும் மகா ணி விஷயத்தில் கொள்ள வண்டாம்!

கரு: ரொம்ப சந்தோஷம்! துசரி, இளவரசி காஞ்சனா வியார்..........

ஆல: (அலட்சியமாக) ூம்...அற்பப்புழு.....இடக்கு ய்தால் அவளையும் அடக்க ண்டியதுதான்! அஞ்சாமல் ல்.

கரு: ஸ்வாமி ஒரு சந்தேகம்.

ஆல: என்ன?

கரு: இந்தக் காரியம் வெளிக்குத்தெரிந்துவிட்டால்..?

ஆல: உன தலைக்கு ஆபத்து என்றுதானே பயப்படுகிறாய்... (கேலிச் சிரிப்பு) பயித்தியக்காரனே...பயப்படாதே. பதறாமல் சென்று சிதறாமல் காரியத்தைக் கச்சிதமாய் முடித்துவிடு, உன் தலைக்கு நான் பொறுப்பு!

கரு: தங்கள் ஆசீர்வாதம் இந்த நாய்க்கு இருக்கும்போது காரியம் எப்படி ஸ்வாமி காயாக முடியும்?

ஆல: சொல்லாதே.....செயலில் காட்டு. அதைப் பொறுத்துத்தான் உன் பதவிப் பரிசும் நிச்சயிக்கப்படும்!

கரு: அது முடிந்துவிட்டதாகவே எண்ணிக் கொள்ளலாம்!

ஆல: எப்படி முடிப்பாய்?

கரு: நமக்கு தெரிந்த ஓர் சித்தவைத்தியன் இருக்கிறான். அவனை எனக்கு வெகுநாளாகத் தெரியும். அவன் மூலமாய் உடனே வேலை செய்யக்கூடிய சஞ்சீவினியை வாங்கி காரியத்தை முடித்துவிடுகிறேன்.

ஆல: (ஆவலுடன) யாரது அந்த நண்பன்?

கரு: அவன்தான்......

[குசு குசு வென்று காதில் உரைக்கிறான்]

ஆல: சபாஷ்.......அருமையான...திட்டம்.......கட்டாயம் முடித்துவிடு!

கரு: தங்கள் சித்தம் என் பாக்கியம்!

ஆல: சரி, நீ யார்கண்ணிலும் படாமல் சாக்ரதையாய் சென்றுவிடு. (போகிறான். தடுத்து) ஹூம்...இரு...இதோ, இந்தத் திருநீற்றைத் திலகமாக இட்டுச் செல். இது உனது இடுக்கண்களைக் களைந்தெறியும் ஆயுதமாக இலங்கும்!

கரு: அடியேன் பாக்கியம்!

[பயபக்தியுடன் வாங்கிப் பூசிக் கொள்ளுகிறான்]

ஸ்வாமி....நான் வரட்டுமா?

ஆல: சென்று, செயத்துடன் திரும்பு.

கரு: ஆக்ஞை!

[வணங்கிச் செலகிறான்]

ஆல: (தனிப் பேச்சு) ஹூம்...அடிமுட்டாள்.....உபயோகமற்ற சாம்பலை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும் போது பெரிய சாம்ராஜ்யப் பதவி ஏற்பவனுக்குண்டாகும் ஆனந்தத்தை அடைகின்றான். அறிவிலி. ஹூம்...இந்த நாய்களுக்கு இப்படியும் இல்லாவிட்டால் நாம் குடியிருக்கும் வீட்டையே கொளுத்திவிடமாட்டார்களா...!

[ஆலவாயர் மகள் திலோத்தமா வருகை]

திலோ: அது தெரிந்துதானே, இராமாயணத்தில் இவர்களைக் குரங்குகளாக்கி வைத்திருக்கின்றார்கள் நம்மவர்கள்!

ஆல: [திரும்பிப்பார்த்து—நகைமுகத்துடன்] யாரது... திலோத்தமாவா.......! திலோத்தமா, நீ ஒன்று சொன்னாலும் நன்று சொன்னாய்.........அது போகட்டும் இதுவரை நீ எங்கு போயிருந்தாய்?

திலோ: நந்தவனத்தில் ராஜகுமாரியுடன் விளையாடிக்கொண்டிருந்தேனப்பா!

ஆல: [அருவெறுப்பாக] யாரோடு.........ராஜகுமாரியோடா....?

திலோ: ஏன்.....ராஜகுமாரியுடன்தான்!

ஆல: திலோத்தமா, உனக்கு எத்தனை ஆயிரம் தரம் உரைப்பது? நம் குலமென்ன...கோத்திரமென்ன.... கௌரவமென்ன ......அவள் பொட்டுப் பூச்சியினும் கேவலமானவள், அற்பப் புழு! நீயோ பூதேவரின்மகள்!

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குக் கிடைக்கும் என்று கேட்கும் தூர்த்தன்."

"சீச்சீ—அவனும் ஓர் மனிதனா?- இரக்கம் என்பதே இல்லாத கயவன்! கபோதி! கொடூர உள்ளம் படைத்த காட்டு விலங்கு!"

"இப்படியெல்லாம் உங்களில் பலர் நிச்சயமாக என்னைத் தூற்றுவீர்கள்.

"தூற்றுங்கள் — தாராளமாகத் தூற்றுங்கள் — பாதகன், பழிகாரன், மாபாவி, கொலைகாரன், கொடூர உள்ளம் படைத்த கயவன் — என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்—வார்த்தைகளைக் கடுவிஷத்தில் தோய்த்தெடுத்து வேண்டுமானாலும் என்மீது வீசுங்கள்—அக்கிரமமே வடிவாக வந்த அயோக்கியனே என்று வேண்டுமானால்கூட சொல்லுங்கள்—அவ்வளவுக்கும் நான் ஒரு வார்த்தைகூட எதிர்த்துப் பேசமாட்டேன்— 'ஆமாம்! நீங்கள் சொல்வது உண்மைதான்' என்று கூறிக் கண்ணீர் சிந்திய வண்ணம் தலை குனிந்து நிற்பேன்—ஆனால் என்னை இரக்கமில்லாதவன் என்று மட்டும் சொல்லாதீர்கள்—அதைமட்டும் நான் பொறுத்துக் கொள்ள முடியாது.

"இரக்கமா இருக்கிறது உன்னிடம்! இரக்கம் இருந்தால் உன் குழந்தைகளை நீ கொலையா செய்திருப்பாய் என்று கேட்பீர்கள் நீங்கள்.

"நான் கூறுகிறேன்: இரக்கம் இருந்தது என்னிடம்—எனவே தான் நான் கொலை செய்தேன்.

"புரியாத புதிராக இருக்கிறதே என்பீர்கள்! புரியத்தான் செய்யாது முதலில்—கொஞ்சம் விளக்கம் தேவை — அது கிடைத்து விட்டால் பிறகு என் வாசகத்தின் பொருள் உங்கட்குத் தாராளமாகப் புரியும்.

"கேளுங்கள் என் பரிதாபக் கதையைச் சில விநாடி நேரம்! பிறகு கூறுங்கள், நான் இரக்கம் அற்ற அரக்கனா என்பதை!

"வேலை! அந்த இரண்டெழுத்துச் சொல்லினைத் தேடித் தேடி அலைகிறதே பெரியதோர் கூட்டம் இந் நாட்டில்—அந்தப் 'பட்டாளத்'துப் 'போர் வீரர்'களில ஒருவன்தான் நானும்!

"சென்ற ஓராண்டு காலமாக எனக்கோ வேலை இல்லை! நான் வேலை தேடி அலையாத இடமோ எங்கும் இல்லை!

"கிராமங்களிலே சுற்றி அலைந்து கேட்டேன்—வேலை கிடைக்கவில்லை!

"நகரங்களை முற்றுகையிட்டுப் பார்த்தேன்-அங்கும் வேலை அகப்படவில்லை.

"என் நண்பர்களை நாடி நின்று வேலை கேட்டேன்—இல்லை என்று கூறி என்னைத் துரத்தி விட்டார்கள்.

"என் உறவினரிடம் பணிவாக வேலை கேட்டுப் பார்த்தேன்—அது ஏது இங்கென்று கூறி விட்டார்கள்.

"எங்கெங்கோ சென்றேன்—யார்யாரையோ கண்டேன்—எப்படியெப்படியோ கெஞ்சினேன்—என்றாலும், வேலை!, அந்தச் சிறு சொல், அது என்னை எட்டிப் பார்க்கவும் மறுத்துவிட்டது.

"நாட்கள் வேகமாக மறைந்தன—அதைவிட வேகமாக என் கையிலிருந்த சிறு தொகையும் கரைந்துகொண்டு வந்தது-எனவே முன்னிலும் வேகமாக வேலைக்காக அலைந்து திரிந்து ஓடியாடிக் கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தேன்—ஆனாலும் வேலை—அந்தத் தளிர்போன்ற மேனி படைத்த தையல்—அவள் என் கண்ணெதிரே தப்பித் தவறிக் கூடத் தென்பட்டாளில்லை.

"நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாக மாறின.

மாதங்களும் ஆண்டு எனும்
நிலையைப் பெறத் தொடங்கின,
என்றாலும் வேலை, என்னைப்
பொறுத்தவரை எட்ட எட்ட
எட்டாது செல்லும் அடிவான
மாகவே இருந்துவிட்டது.

"வேலையோ கிட்டவில்லை,
கைப்பொருளோ கரைந்துவிட்
டது பிறகு?

"பிறகு என்ன? சொல்லவா
வேண்டும்? பட்டினி என்
இல்லத்தைச் சுட்டுப் பொசுக்
கத் தொடங்கிவிட்டது! பகல்
பட்டினி சில நாள்! இராப் பட்
டினி பல நாள்! முழுப் பட்டினி
பற்பல நாள்! இப்படியாக என்
இல்லத்தில் ஒரு சோக
தொடர்கதை தொடக்கமா
விட்டது.

"நான் பட்டினி கிடந்தாலும்
என் இரு குழந்தைகளுக்கு மட்
டும் எப்படியோ எங்கிருந்தே
உணவைத் தேடித் தேடி
கொண்டுவந்து கொடுத்து
கொண்டிருந்தேன் பலநாட்கள்.

"ஆனால் பிறகு இதவு
முடியவில்லை. பகலிலே மட்டு
தான் குழந்தைகட்கு உண
கிடைக்கலாயிற்று. இர
வேளைகளிலே பட்டினி அ
களையும் பதம் பார்க்க
தொடங்கிவிட்டது.

"இப்படிச் சில நாட்க
மறைந்தன. பிறகு ஓர் நா
குழந்தைகள் முழுநாளும் ப
டினி இருந்தாகவேண்டிய நி
ஏற்பட்டுவிட்டது.

"அன்று எங்கெங்கே
சென்று கெஞ்சிப் பார்த்தே
யார் யாரையோ அடுத்து உத
உதவி என்று ஊசலாடிப் பார்
தேன்! அக்கம் பக்கத்தவர்க
நாடி குழந்தைகள் வாழ ஒ
கவளம் உணவேனும் கொ
துதவுங்கள் என்று வேண்டி
பார்த்தேன்! இல்
எங்குமே உணவு கிடை
வில்லை! குழந்தைகள் சோ

(15-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே நேரத்தில் சோவியத் ருஷ்யாவில் 1950-ல் கல்விக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை என்ன என்று காண்போம். 1083 கோடி ரூபாய்!

1947-48-ல் அமெரிக்கா முழுவதிலும் கல்விக்காக 4,[illegible]11,534,000 டாலர்கள் செலவு செய்யப்பட்டன!...... இங்ஙனம் ஒவ்வொரு நாட்டைப்பற்றியும் புள்ளிவிவரம் கூறிக்கொண்டே போகலாம்; ஆனால் இதிலிருந்து ஒரே ஒரு உண்மையை உணர்ந்துகொள்ள முடியும். "மற்ற நாடுகளில் கல்விக்காகப் பெரும் தொகை செலவு செய்யப்படுகிறது; இந்தியாவில் எல்லா நாடுகளையும்விட மிகக் குறைந்த தொகையே கல்விக்காக ஒதுக்கப்படுகிறது", என்பதுதான் அந்த உண்மை. 'ஒரு பள்ளிக்கூடத்தைத் திறக்கிறவன், ஒரு சிறைச்சாலையை மூடுபவனாகிறான்' என்ற உண்மையை அறியாதவர்கள் அல்ல, இந்த ஊராள்வோர். உண்மை அறிந்தும், அவர்கள் சிறைகளை கட்டத்தங்கள் சிந்தையைச் செலவிடுகின்றனரே தவிர, கல்லூரி கட்டுகிறார்கள் இல்லை... என்ன விந்தை!

அமெரிக்காவில் 2 மாணவர்கள் கொண்ட பள்ளியிலிருந்து லட்சம் மாணவர்கள் உள்ள பள்ளிவரை பல ஆயிரக் கணக்கில் இருக்கின்றன.

அமெரிக்காவில் 2 மாணவர் கொண்ட பள்ளிகள் 750

அமெரிக்காவில் 4 மாணவர் கொண்ட பள்ளிகள் 2250

அமெரிக்காவில் 5 மாணவர் கொண்ட பள்ளிகள் 30,000

அமெரிக்காவில் 6,7 மாணவர் கொண்ட பள்ளிகள் 16,000

அமெரிக்காவில் 17-க்கு குறைந்த மாணவர் கொண்ட பள்ளிகள் 85,000

இலவச, ஆரம்பக் கல்வி கற்பிக்கும் பள்ளிகள் 172,000 உள்ளன; 9-லட்சம் ஆசிரியர்கள் உள்ளனர். 1900-ல் 240,000 கல்லூரி மாணவர்கள் தொகை 1940-ல் 5-லட்சமாகப் பெருகி, 1948-ல் 26-லட்சமாகப் பெருகியுள்ளது.

ருஷ்யாவில் 1938-39-ல் உயர்தரப்பள்ளிகள் 12,469 இருந்தன 1950-ல் பலவிதமான கல்வி நிலையங்களிலும் கல்வி பெற வந்த மாணவர்கள் 380 லட்சமாகும்! 1930 லிருந்து 1950 வரை உயர்தரப் பள்ளிகள் 4 மடங்கும், 7 ஆண்டுப் பள்ளிகள் 8 மடங்கும் பெருகியிருக்கின்றன. சோவியத் யூனியனில் தற்போது 2 லட்சத்துக்கு மேற்பட்ட பள்ளிகளும் 1.8 கோடி ஆசிரியர்களும் உள்ளனராம். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொகை எண்பது ஆயிரமாம்! இவைதவிர, குருடர் செவிடர் பள்ளிகளும் தனியே உள்ளன. இங்ஙனம் மேலைநாடுகள் கல்வித் துறையில் மிகவேகமாக முன்னேறி வருகின்றன.

சென்னை மாகாணத்தை நோக்குவோம். 1944-45-ல் 36,035 ஆரம்பப் பாடசாலைகள்! இருந்தன; 1948-49-ல் 36,668 ஆரம்பப் பாடசாலைகள்! அவற்றில் 38,20,000 மாணவர்கள் படிக்கின்றனர். மத்தியதரப் பாடசாலைகள் 1944-45-ல் 840 இருந்தன. 1948-49-ல் 1041.........! மாணவர் தொகை 493,729....! 1944-45-ல் கல்லூரிகள் 50—1948-49-ல் 68! மாணவர் தொகை 38,000! 1944-45 பொறியியல் கல்லூரி (Engineering Callege) ஒன்று இருந்தது. அதில் 729 மாணவர்கள். 1948-4-9ல் 4 கல்லூரிகள் அவற்றில் 1658 மாணவர்கள்.... எப்படி நம் முன்னேற்றம்?.......

அப்டன் ஸிங்க்ளர் என்ற பிரபல நாவலாசிரியர் வாழ்வில் நடந்த சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் சிறுவயதில் பள்ளிக்கூடம் போகமுடியாமல், வறுமையில் வாடினார். அதற்காக அப்டன் ஸிங்க்ளர் என்ன செய்தார் தெரியுமா? விகடத் துணுக்குகள் எழுதிப் பல இதழ்களுக்கு அனுப்பி, அதிலிருந்து வரும் அன்பளிப்பைக் கொண்டு அவர் பள்ளிச் செலவைப் பூர்த்தி செய்துகொண்டு வந்தாராம்! இதிலிருந்து இரு உண்மைகள் விளங்குகின்றன. மேனாட்டுப் பத்திரிகைகள் எழுத்தாளருக்கு அதிகமாக அன்பளிப்பு தந்து, அவர்களை ஊக்கப்படுத்துகின்றன. சாதாரணவிகடத் துணுக்குகள் எழுதியே, ஒருவர் பள்ளி வாழ்க்கையை நடத்தினார் என்றால் அவருக்கு எவ்வளவு பணம் தரப்பட்டிருக்கும்? மேலும், மேல்நாட்டில் பள்ளிச் சம்பளம் மிகக்குறைவு என்ற உண்மையும் புலனாகிறது. நம் நாட்டிலோ எழுத்தாளர் என்ற அபூர்வப் பிரகிருதிகள் உயிர் வாழ வேண்டுமென்பதற்காக, ஏதோ 'சன்மானம்' என்ற பெயரால் சிறு தொகை அளிக்கப்படுகிறது; பெரிய நாவல் அல்லது தொடர்கதை எழுதி, அதிலிருந்து வரும் அன்பளிப்பைக் கொண்டு ஒருவர் இங்கு கல்லூரியில் படிப்புச் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. காரணம் கல்லூரிச் சம்பளம் மிகமிக அதிகம்; மேலும் சன்மானமாகத் தரப்படும் தொகை மிகச் சிறிய தொகையாக இருக்கும்!...

நம்மவர் கல்வித்துறையில் முன்னேறாததற்குக்காரணங்கள் பல. 'அரசாங்கம் போதிய உதவி செய்யத் தவறி விட்டது. கல்விக்கு உதவி செய்ய வேண்டிய கடமையை மறந்துவிட்டு அரசாங்கம் வேறு இனங்களில் பணத்தைச் செலவு செய்கிறது. அரசாங்கம் கல்விக்கு உதவ

வேண்டும் என்பது அதன் கடமையா, மேல் நாடுகளின் அரசியல் திட்டத்தின்படி கல்விக்கு வேண்டுவது அவசியந்தானா என்பதைக் காண்போம்.

சோவித் ருஷ்யாவின் அரசியல் திட்டம் 121-வது பிரிவின்படி ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி பெற உரிமையுண்டு. இலவச ஆரம்பக்கல்வி, பள்ளிக்கூடங்களில் அவரவர் தாய் மொழியில் கற்பிக்கப்படும். அயர்லாந்து அரசியலின் 42 (4) வது பிரிவின்படி அரசாங்கம் இலவச ஆரம்பக் கல்வி அளிக்க வேண்டும்; தவிர தனிப்பட்ட கல்வி நிலையங்களுக்கும் போதிய அளவு பண உதவி செய்யவேண்டும். ஸ்விட்ஸர்லாந்து அரசியலின் 27-வது ஷரத்தின்படி மாகாணங்கள் நிறைந்த இலவசக் கல்வியை மக்களுக்கு அளிக்க வேண்டும். போலந்து அரசியலின் 114-வது ஷரத்தின்படி எல்லா மக்களுக்கும் ஆரம்பக் கல்வி இலவசமாக உண்டு. கல்வியின் காலம், எல்லை, முறை முதலியன சட்டப்படி நிர்மாணிக்கப்படும். அகில இந்தியக் காங்கிரஸின் கராச்சி தீர்மானம் பிரிவு 1 (xi) - ன்படி அரசாங்கம் மக்கட்கு இலவச கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும்.

காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியதே தவிர, அதன்படி நடக்க ஏற்பாடுகள் அதிகம் செய்யவில்லை. அரசியல் திட்டத்தில் தீர்மானித்தபடி மற்ற நாடுகளில் மக்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டிய உதவியை அரசினர் செய்து வருகின்றனர் என்பது கண்கூடு. நமது இந்தியப் புது அரசியலின் படியும் மக்களுக்குக் கல்வி அளிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிறநாடுகள் முன்னேறி வருகிற நோத்தில், நம் நாட்டு நிலையை எண்ணிப் பார்க்கவும் இதயம் குமுறுகின்றது. எப்போது நம்நாட்டு மக்கள் அனைவரும் கல்வி பெறுவார்கள், என்று நம் நாட்டில் காணுமிடங்களில் எல்லாம் கல்வி நிலயங்கள் இருக்கும், எந்த நாளில் நம்மருமைத் தமிழகத்தில் பொறியியற் கல்லூரிகளும், மருத்துவக் கல்லூரிகளும் கணக்கின்றி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தால், இந்த லட்சியத்தை அடைவது எளிதல்ல என்றுதான் தோன்றுகிறது. என்று நமது அரசாங்கம் இராணுவச்செலவை வெகுவாகக் குறைக்கிறதோ, அன்றுதான் இந்த லட்சியத்தை அடைய முடியும். ஆனால் இன்றைய நிலையில் இராணுவச் செலவைக் குறைக்கக் கூடும் என்று நம்புவது நாமே நம்மை ஏமாற்றிக் கொள்வது போலாகும். ஆகவே அரசாங்க உதவி இல்லாத நிலையில் என்னசெய்ய வேண்டும்?

* தனிப்பட்ட பணக்காரர்கள் ஆங்காங்கு கல்லூரிகள் நிறுவப் பண உதவி, கட்டட வசதி முதலியன செய்து கொடுக்க வேண்டும்.

* கல்லூரிகள் நிறுவுதல், மாணவர்களைச் சோத்தல் முதலிய விஷயங்களில் உள்ள விதிகளைச்சற்று தளர்த்த வேண்டும்.

* கல்லூரிகளில் ஷிப்ட் முறை கொண்டுவரப்பட வேண்டும்.

* கோயில்களில் குறிப்பிட்ட நேரங்களில் பள்ளிக் கூடங்களை நிறுவிக் கல்வி அளிக்கலாம்.

* கல்லூரி, பள்ளிக்கூடச் சம்பளங்களை வெகுவாக்க குறைக்க வேண்டும்.

* தனிப்பட்டவர்கள் கல்லூரி நிறுவ விரும்பினால், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்து தர வேண்டும்.

* தாழ்த்தப்பட்டோர், பின்னடைந்தவர்கள் முன்னேற்றமடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமுலில் கொண்டு வரப்படவேண்டும்; இந்திய அரசியலைத் திருத்தியாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நிலை நிறுத்தவேண்டும்.

இங்ஙனம் மேற்கண்ட முறைகளைப் பின்பற்றினால் ஓரளவிற்காவது அறியாமையை அகற்றலாம்.

எங்கே, மற்றொரு முறை புரட்சிக்கவிஞரை நினைவூட்டிக் கொள்ளுங்கள்.

"எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்." நாணிடுவார்களா......?

பொங்கல் வாழ்த்துக்கள்

அழகிய பல நிறங்களில்
பொருத்தமான சுவைமிக்க கருத்துகளோடு
பலவிதமான வாழ்த்துக்கள்
எம்மிடம் கிடைக்கும்.

ஒவ்வொன்றின் விலை அணா 2.

மொத்தமாக 50-க்குக் குறையாமல் வாங்குவோருக்கு 20 %. கழிவு.

போர்வாள் அலுவலகம் சென்னை 1.

காஞ்சி மாநாட்டுத் தீர்மானங்கள்!

1. தமிழ்க்கடல்மறைமலைஅடிகள், பேராசிரியர் ராமசாமி, சர்தார் பட்டேல், பெர்னாட்ஷா, திருப்பத்தூர் நகரசபைத் தலைவர் சுப்பிரமணியம், காஞ்சிவள்ளல் கந்தசாமி ஆகியோரின் மறைவு குறித்து இம் மாநாடு தன் ஆழ்ந்த துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. மூன்றாவது உலகப் போருக்கான அறிகுறிகள் தென்படுவதைக் கண்டு கவலையுறுவதுடன், அது தவிர்க்கப்பட வேண்டுமென்றும், இம்மாநாடு கருதுகிறது.

(அ) உலக சமாதானம் தழைப்பதற்கான வழிவகைகளை கண்டு, அதற்கேற்ற முயற்சிகளைச் செய்வதில் இந்திய சர்க்கார், தயங்கக் கூடாதெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

3. உணவுப்பஞ்சம் நாட்டின் நானுபகுதிகளிலும் தலைவிரித்தாடுவதைக் கண்டு கவலைப்படுவதோடு, அதைத் தீர்க்கும் எல்லாவித ஏற்பாடுகளிலும், தங்களது ஒத்துழைப்பை அளிக்கத் தயாராகயிருப்பதாக இம் மாநாடு ஆளவந்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

(அ) சென்னை மாகாண சர்க்கார், மக்களின் தவிப்பைப் பன்முறை எடுத்துச் சொல்லியும், கவனிக்காது புறக்கணிக்கும் இந்திய சர்க்காரின், போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) மக்களின் ஜீவாதாரமான உணவு விஷயத்தில், நிரந்தரமான கொள்கையில்லாமல் நடக்கும் முறை பேராபத்தைத் தரும் என்று இந்திய ஆட்சிக்கு இம்மாநாடு எச்சரிக்கிறது.

5. பொதுவாக திராவிட சமுதாயத்துக்கும் சிறப்பாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரது நல்வாழ்வுக்கும் காரணமாய் விளங்கிவந்த வகுப்புவாரி உரிமை முறையான்து, இன்றைய புதிய இந்திய அரசியல சட்டத்தின் துணையினால் செல்லத் தக்கதல்ல வென்றாக்கிவிட்டார்கள். மாகாண ஆட்சியாளர்கள், இந்த சமூக நீதியை உயிர்ப்பிக்க, 'சுப்ரீம்கோர்ட்' வரை சென்றுள்ள நன்முயற்சியைப் பாராட்டுவதோடு, அங்கேயும் நீதி கிடைக்கவில்லை யென்றால், இந்திய அரசியல் அமைப்பையே திருத்திடவும் தயங்கக் கூடாது என்று மாகாண சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

6. (அ) பொதுவாகமக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில் அரசியலார் விதித்துவரும் தடை உத்திரவுகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளுக்கும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகப் பிரசாரத்திற்கும் இடையூறு உண்டாகும் வகையில் அரசியலார் வீணை தங்களது அடக்குமுறைகளைக் கையாண்டு வருவதைக் கண்டிக்கும் முறையில் செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூரில் பேச்சுரிமையை நிலைநாட்ட 144 தடை உத்திரவை எதிர்த்து ஆளவந்தாரின் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம், அடக்குச் சட்டம் ஆகிய கொடுமைகளுக்கு ஆளாகி தொண்டு புரிந்த தோழர்களனைவரையும் இம் மாநாடு மிகமிகப் பாராட்டுகிறது.

(இ) அதேபோன்று திருச்சி மாவட்டம், நாரணமங்கலத்தில் 144 தடை உத்திரவைத் துச்சமாக மதித்துக் கடுங்காவல் தண்

(14ம் பக்கம் பார்க்க)

திராவிடர் டைரி—1951

இரண்டாம் பதிப்பு—அச்சில்!

அச்சிடப்பட்ட டைரிகள் முற்றிலும் செலவாகி விட்டன. இரண்டாம் பதிப்பு வேகமாக அச்சாகி வருகிறது. முதற் பதிப்பு வெளியான பிறகு உருவாகியுள்ள தி. மு. க. கிளைகளின் செயல் உறுப்பினர் பட்டியல் இதில் இணைக்கப்பட்டுள்ளது. வேண்டுவோர் உடனே முன் பணம் அனுப்பித் தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ள வேண்டுகிறோம்.

550 பக்கங்கள் **விலை அணா 14**

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரண அஞ்சலில் அனுப்ப ரூ. 1—0—0-ம், பதிவு அஞ்சலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுபபவேண்டும்.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

★ மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை [illegible] மாட்ட நினைக்கும் சிறைச்சாலை! ★

குவலயமே எதி[illegible]நின்றாலும் கொஞ்சமு[illegible]லங்கமாட்டோம்!

இலட்சியபுரிப் பயணத்[illegible]ளும் நிறுத்தமாட்டோம்!

ஆட்சியாளரின் அடக்கு[illegible] பாணங்கள்— நம் இலட்சி[illegible]ற்றிக்கான அச்சாரங்கள்!

சிற்றரசு — ஆ[illegible] போர்முழக்கம்.

காஞ்சி [illegible]ாட்சிகள்.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

"பெற்றால் திராவிடநாடு—இல்லையேல் இடுகாடு!"

"இன்பத் திராவிடமே எமது இலட்சியகீதம்"

"அடைந்தே தீருவோம் திராவிடத் தனி அரசை—அதில் நாம் நிறுவியே தீருவோம் சமதர்மக் குடியரசை"

'குவலயமே எதிர்த்தாலும் கலங்கமாட்டோம்—இலட்சியபுரிப் பயணத்தை ஒரு நாளும் நிறுத்தமாட்டோம்"

"ஆட்சியாளர் எய்யும் அடக்குமுறைப் பாணங்கள்—நம் இலட்சிய வெற்றிக்கான சிறந்த அச்சாரங்கள்!"

"அவர்கள் வீசும் தடியடி—அது, நம்மைத் தூங்காதே திராவிடா என்று தட்டி எழுப்பும் இன்ப ஓசை."

"துப்பாக்கிக் குண்டுகள்—நம் பாதையைச் செப்பனிடும் முன்னோடும் பிள்ளைகள்!"

செந்தமிழ் வீரமும் பகுத்தறிவு வேகமும் கலந்த இந்த வீரமுழக்கங்கள் தான் காஞ்சிமா நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஒலியும் எதிரொலியுமாக எழுந்தபடி இருந்தன டிசம்பர் 23—24 ஆகிய இரு நாட்களிலும்.

காஞ்சிபுரம்—பழம் புகழ், புதுப் பெருமை இரண்டும் பெற்ற இன்பபுரி. அங்கேதான் இன்பத் திராவிடத்தின் இதயகீதங்கள் எனத்தகும் இளஞ்சிங்கங்கள் ஆயிரமாயிரவர் கூடி அறப்போர் முழக்கம் புரிந்தனர் சென்ற கிழமை.

காஞ்சிபுரம்!

தென்னாட்டு வரலாற்றில் தனக்கென்று என்றும் அழியாததோர் அத்தியாயத்தைப் பெற்றிருக்கும் வட்டாரம்!

வீரத் திராவிடர்கள் வெற்றுரை பேசும் வீணர்களல்ல—ஒரு காலத்தில் உலகெங்கும் புகழ்க் கொடி பறக்கும் விதத்தில் செங்கோல் ஓச்சிய சிங்க ஏறுகளின் கூட்டம் என்பதை எழில்பட எடுத்து விளக்கும் சிறந்த நகரம்!

பல்லவர்களின் தலை நகராக ஒளி வீசி நல்லதோர் புகழ்பெற்ற மண்டலம்!

சோழ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சோபிதமும் சொகுசும் நிறைந்த சொர்ண புரியாய் ஜொலித்துக் கொண்டிருந்த தாஜமகால்!

மணிமேகலை என்னும் அந்த மங்காப் புகழ் படைத்த மாபெரும் காவியத்தில் மகத்தான இடம் பெற்ற மணிபுரி!

பெரியார் இராமசாமியை காங்கிரஸ் சிறையிலிருந்து விடுவித்துத் திராவிடர் இயக்கத்திற்கு அரியதோர் அன்புப் பரிசாக அளித்த அருந்திறல் வீரர் கோட்டம்!

வீரத் திராவிடத்தின் வெண்ணிலாவை, வாலிபர் உள்ளங்களின் வசீகரத் தென்றலை, பகைவரும் போற்றும் புகழ்மிகு தலைவரை, செந்தமிழ் நாட்டின் சிந்தனை ஓவியத்தை,—ஆம்—நம் அருமைப் பொதுச் செயலாளரை நமக்களித்துள்ள நல்லூர்.

காஞ்சீபுரம்! அதை எண்ணுகிறபோதே இன்பம் செந்தமிழர் உள்ளத்தை வந்து மோதும் கடலின் அலைகளென! அவ்வளவு சிறப்பை, செல்வாக்கை, ஒப்பற்ற கருவூலத்தை, இணையற்ற செல்வத்தை நமக்கு நல்கியிருக்கிறது அந்த மண்டலம்! அங்கே முன்னேற்றக் கழக மாநாடு! வெண்ணிலா, வானத்தில்! வாள்! வீரன்கரத்தில்! திருக்குறள், தமிழன் இதயத்தில்! மிகமிகப் பொருத்தமான காட்சி!

"செங்கற்பட்டு மாவட்ட மாநாடு — காஞ்சிபுரத்தில்!" என்ற சேதியை, முதன்முதல் கேள்விப்பட்ட நாளிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆநந்த பவனமாகக் காட்சி தரலாயினர்—பூரிப்பும் புன்னகையும் அவர்கள் உள்ளத்தில் புகுந்து விளையாடலாயின. இயற்கைதானே! தென்னாட்டுப் பெர்னாட்ஷாவை உலகுக்களித்த உன்னத மண்டலமல்லவா காஞ்சி! அங்கே மாநாடு என்றால் ஆற்றல்மிகு திராவிடர் இதயத்தில் ஆநந்தபவனி நடக்காமலா இருக்கும்?

22—12—50 வெள்ளிக்கிழமை காலையிலிருந்தே செந்தமிழகத்தின் பகுதிகள் பலவற்றிலிருந்தும், வீரத் திராவிடத்தின் விடி வெள்ளிகள், ஆயிரமாயிரமாக வந்து குவியலாயினர் காஞ்சிமா நகரில். குறிப்பாக, வடார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்கள் செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டை, தங்கள் மாவட்ட மாநாடாகவே கருதி, உரிமையுடனும் பெருமையுடனும், ஏராளமான அளவு, திரளாக வந்து காஞ்சிபுரத்தை முற்றுகையிடலாயினர்.

பொழுது ஏற, ஏற, கூட்டம், அளவில்—அளவில் மட்டுமல்ல, உற்சாகத்தில் — உற்சாகத்தில் மட்டுமல்ல உள்ள உறுதியில், ஒன்று பத்து நூறாகப் பெருகிக்கொண்டே வந்து, வெள்ளி இரவு, காஞ்சீபுரத்தின் வட்டாரந்தோறும், வீதிதோறும், எங்கும், எங்கெங்கும், இன்பத் திராவிட முழக்கமே நீக்கமற நிறைந்திடலாயின.

பொழுது புலர்ந்தது. காரிருள் அகன்றது. கதிரவன் எழுந்தான். மாநாடு கூடிற்று.

பந்தல் பிரம்மாண்டமானது.

வந்து குழுமிய மக்கட்கூட்டமோ அதைவிடப் பிரம்மாண்டமானது.

கடல் பொங்கியெழுந்து புரண்டோடி வருவதைப்போல, வெள்ளம் அணைகளை உடைத்துக் கொண்டு அளவற்ற வேகத்துடன் வருவது போல, ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட அருந்திறல் வீரர்கள் நாடெங்கணுமிருந்து ஓடோடி வந்திருந்தனர் மாநாட்டிற்கு.

தாங்கள் பெற்றெடுத்த மகவுகள் இங்ஙனம் திராவிடத் திருநாட்டின் விடுதலைப்போருக்கான வீரமுரசுகளாகத் திகழும் வியத்தகு காட்சியைக் கண்டு களிப்பும் பெருமையும் கொண்டவர்களாய், எங்கள் மக்கள் மட்டுமா — நாங்களும் தயார் விடுதலைப் போருக்கு என்ற உறுதி உரையைத் தங்கள் தோற்றத்தின் பொலிவாலேயே நன்கு விளக்கும் சிறப்பு மிக்கவர்களாய், முன்னாள் போரிலே தன் அண்ணனையும் முந்திய நாள் போரிலே தன் காதலனையும் தாய்நாட்டுப் போரிலே பலியாக இழந்திருந்தும் இந்நாள் போருக்கு எட்டுவயது நிரம்பிய தன் ஓரே மகனைத் தலைவாரிப் பூச்சூட்டி வேல் ஒன்றைக் கையிற் கொடுத்து செருமுகம் நோக்கிச் சென்று வா என்றனுப்பினாளே சங்க கால வீராங்கனை ஒருத்தி அவளின் பரம்பரையே நாங்கள் என்பதை எழில்பட விளக்கும் ஏற்றம் மிக்கவர்களாய், மாநாட்டின் ஓர் புறத்தில் வீற்றிருந்தனர்; வளமார் திராவிடத்தின் வீர அன்னைமார்கள்.

மேடை மீது, இயக்கத் தளபதிகளும் தலைவர்களும், தங்கள் பார்வையே ஒரு பிரசங்கம் என்று கூறத்தக்க நிலையில், கவின்பெற வீற்றிருந்தனர்.

ஓரே வார்த்தையில் கூறுவதானால், மாநாடு, மாநாடாக இல்லை—அறப்போர்க் களத்தில் குதிப்பதற்கு முன்னால் வீரர்கள் நடத்தும் பாசறைக் கூட்டமாக இருந்தது.

தோழர் நாகூர் அனிபாவின் தமிழ்இசைப் பொழிவு நிகழ்ந்தபிறகு, விருதுநகர் தனிஅரசு ஆசிரியர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், அரியதோர் விரிவுரை ஆற்றி மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள்

ஆசைத்தம்பியின் விளக்கவுரை ஆட்சியாளர்களின் அடக்குமுறை அலங்கோலத்தை அழகுபட எடுத்துக்காட்டும் தன்மை படைத்ததாக இருந்தது.

"நெருக்கடி மிக்க நேரம். அளவில்லாத அடக்குமுறை. போலீஸ் கெடுபிடி. பயங்கரமான

தடியடி. கொடூரமான துப்பாக்கிப் பிரயோகம். வெஞ்சிறை வாழ்வு. இவை அத்தனையையும் நாம் அடிக்கடி காணவும் அனுபவிக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துவிட்ட நேரத்தில் நாம் கூடியிருக்கிறோம்'' என்று தொடங்கி, ''இவைகளைக் கண்டு நாம் அஞ்சிவிடவில்லை—அயர்ந்துவிடவுமில்லை. பயந்துவிடவில்லை—பதுங்கிவிடவுமில்லை. ஏன்? அடக்குமுறை ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு ஆளவந்தார்களாக இருக்க ஆசைப்படுபவர்கள் வெள்ளைக்காரர்களைப்போலவே பதவிகளைவிட்டு ஓட்டம் பிடிக்கவேண்டிய நேரம் மிக விரைவிலே இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிற காரணத்தால்'' என்று விளக்கி, திராவிடத் திருநாட்டைத் தனி நாடாக்கியே தீருவோம் என்று தோழர் ஆசைத்தம்பி செய்த வீரமுழக்கத்தை ஆட்சியாளர்கள் மட்டும் செவிமடுத்திருந்தால் நிச்சயம் அவர்கள் திராவிட இயக்கத்துடன் தாங்கள் மோதிக்கொள்வது தங்கட்குத்தான் அழிவைத் தரும், திராவிட இயக்கத்துக்கல்ல என்ற உண்மையைத் திட்டவட்டமாக உணர்ந்து கொண்டிருப்பர்.

ஆசைத்தம்பியின் ஆவேச உரைக்குப் பிறகு மாநாடு இடைவேளைக்குக் கலைந்து மீண்டும் கூடியபோது, முதற்கண், மாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று மூத்தமிழ் முழக்கம் புரிந்தார்.

அடுத்து, நீண்ட கை தட்டலுக்கிடையே மாநாட்டித் தலைவர்—செந்தமிழ் நாட்டுச் சிங்க ஏறு தோழர் சி. பி. சிற்றரசு தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தத் தொடங்கினார்.

நகைச்சுவையா, வீரச்சுவையா, அவலச்சுவையா, கருத்துச் சுவையா, எச் சுவை அதிகம் அவர் சொற்பொழிவில்—அதைக் கணக்குப் போட்டுக் கூறுவதென்பது யாராலும் ஆகாத காரியம்—அந்த அளவுக்கு அந்தச் சுவைகள் ஒன்றை ஒன்று பின் தள்ளிக்கொண்டு முன்வந்து நின்றன அவர் சொற்பொழிவில்.

குன்றத்தூர் கொடுமைக்கு ஒரு கண்டனம்—நாரணமங்கலம் தோழர்கட்கு ஒரு பாராட்டு—ஆளவந்தார்களின் அர்த்தமற்ற ஆட்சிக்கு ஒரு சாட்டையடி—மத்திய சர்க்காரின் மதோன்மத்தத்தனத்துக்கு ஒரு புதுவிளக்கம் — இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சியைப்பற்றிய ஒரு முன் அறிவிப்பு—இளந் திராவிட வீரர்கட்கு ஒரு அறிவுரை—இப்படியாக தோழர் சிற்றரசின் சொற்பொழிவு பற்பல பிரச்சினைகள் தோறும் இன்பபுரிப் பயணம் செய்யலாயிற்று.

பயணம், சுவை நிறைந்ததாகவும் கருத்து மிகுந்ததாகவும் அமைந்திருந்ததோடு, ஆளவந்தார்களுக்குப் பல அரிய பாடங்களைப் புகட்டும் அற்புதமானதோர் ஆசானாகவும் உருவாகியிருந்தது.

''சென்னையில், குன்றத்தூரில், கும்பகோணத்தில், நாம் சிந்திய இரத்தத் துளிகள் நம்முடைய இதயத்தில் வீரமுழக்கம் செய்துகொண்டிருக்கின்றன. அங்கே படிந்திருக்கும் இரத்த அடையாளங்கள் மழைக்கால வருகையால் மண்ணிலிருந்து கறையலாம்! அல்லது ஆட்சியாளரே அதைத் தண்ணீரால் கழுவிவிட்டு, ஆசைத்தம்பியை மொட்டையடிக்கவில்லை என்று சொன்னதைப்போல குன்றத்தூரும் கும்பகோணமும் நடக்காத சம்பவங்கள் என்பதாகவோர் மகத்தான பொய்யை மனந்துணிந்து கூறினாலும் கூறிவிடலாம். ஆனால் அந்த சோகக்காட்சி! அதுமட்டும் நம்முடைய, நம் பின் சந்ததிகளுடைய உள்ளத்தைவிட்டு ஒருபோதும் மறையாது.''

''காந்தியார் உயிரோடிருந்தால் இன்றைய ஆட்சியைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். இட்லர் உயிரோடிருந்தால் அவனே நல்லவன் என்ற நற்சாட்சிப் பத்திரத்தை நானிலம் வழங்கியிருக்கும். முசோலினி மூச்சோடிருந்தால், ''முதுமை அடைந்துவிட்டது உனது பாசீச வெறிபிடித்த சர்வாதிகாரம்—இதோ ஒரு நாட்டில் அந்தப் பாசீசவெறி இளமையோடிருப்பதை நீயே பார்'' என்று இந்தியாவைச் சுட்டிக் காட்டி, குன்றத்தூரின்மேல் ஓர் அவமானக் கோட்டை வரைந்திருக்கும் நாகரீக நாடுகள்.''

''கொடியிலே அசோகர், கொள்கையிலே புத்தர், நினைவிலே காந்தியார், நிர்வாகமோ துப்பாக்கிப் பிரயோகம்—இவை, ஓர் அமைதியான ஆட்சியின் அடையாளச் சின்னங்களா? நான் கேட்கிறேன், 144 சட்டம், 153 ஏ, சொத்துகள் பறிமுதல், பொதுக்கூட்டங்கட்குத் தடை உத்தரவு—இதற்குப் பெயர்தான் இராமராஜ்யமா?''

''காயமே இது பொய்யடா என்று பேசுபவர்கள் அவர்கள்தான். இவ்வுலக வாழ்க்கை வெறும் நீர்மேற் குமிழிபோன்றது என்று வேதாந்தம் பேசுபவர்கள் அவர்கள்தான். இன்று இறந்தால் நாளைக்கு இரண்டு என்று காலண்டரைக் கிழிப்பவர்களும் அவர்கள்தான். ஆனால் மந்திரிப் பதவி மாத்திரம் சாகாவரம் பெற்றது என்று நினைப்பதும் அவர்களேதான். இதை எண்ணும்போது அழுவதா சிரிப்பதா—அதுதான் நமக்குத் தெரியவில்லை.''

''நம்முடைய காலத்திலேயே நாம் நாட்டைப் பிரிப்போமா மாட்டோமா என்பதல்ல இன்றைய கேள்வி. நமக்குப் பின் வரும் நம் வாரிசுகள்

எப்படி இருப்பார்களோ—அந்தப் பயமும் நமக்கிருக்கத் தேவையில்லை மானமும் ரோஷமும் நம்மோடு மயானத்துக்கு வந்துவிடக்கூடியன அல்ல. வீரமும் தியாகமும் நம் சவப்பெட்டிக்குள்ளேயே சரணடைந்துவிடக்கூடியன அல்ல. அவை சாகாவரம் பெற்றவை."

"வேலாயுதங்களுக்கும் சூலாயுதங்களுக்கும் கலங்காத நம்மை, ஆறுமுகங்களுக்கும் பன்னிரண்டு கைகளுக்கும் அடிபணியாத நம்மை, கார்க்கோடகன்—கானகத்தில் பறந்தவன் என்றெல்லாம் கக்கிய விஷச் சொற்களை விலாமுறிய அடித்த நம்மை, கனகவிசயர்தம் கருத்தை நெரித்த நம்மைப் பார்த்துக் காமராசர் பயமுறுத்துகிறார் கட்டைவிரலை வெட்டிவிடுவோம் என்று! பாவம்! அவர் திராவிடர்தம் சுட்டுவிரலின் மதிப்பறியா மேதாவி!"

தீப்பொறி பறக்கும் இத் தீவிர வார்த்தைகள், தோழர் சிற்றரசு ஆற்றிய தலைமையுரையின் சிற்சில பகுதிகள்.

அன்பர் சிற்றரசுவின் அருங்கருத்துக் கருவூலம் மாநாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட அந்த அளவோடு முதல் நாள் நிகழ்ச்சி சிறப்புற முடிவுற்றது.

இரண்டாம் நாள் காலையில் மாநாடு மீண்டும் தொடங்கப்பட்டபோது, கூட்டம், கட்டுக்கடங்காத அளவு பெருகிவிட்டது

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம் — வீரம்கொள் கூட்டம்—அன்னார், உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினால் பலராய்க் காண்பார், கள்ளத்தால் நெருங்கொணாதே என வையம் கலங்கக் கண்டு, துள்ளும்நாள் எந்த நாளோ—உள்ளம் சொக்கும் நாள் எந்த நாளோ?" என்று ஏக்கத்துடன் மொழிந்தாரே புரட்சிக் கவிஞர் அன்னார் நாள், அந்த நாள் இந்த நாள்தான் என்று கூறுவதைப்போல அமைந்திருந்தது இரண்டாம் நாளன்று மாநாட்டுப் பந்தலில் மக்கள் மன்றம் வழங்கிய மகத்தான காட்சி.

முற்பகல் நிகழ்ச்சியில்,

தோழர்கள்,

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை,
இளைஞரேறு இரா. நெடுஞ்செழியன்,
எழுத்துச் சிற்பி மு கருணாநிதி,
மாணவர் தலைவர் மதியழகன்,
திராவிடன் ஆசிரியர் நடராசன்,
அதிராம் பட்டணம் என். எஸ். இளங்கோ,
சுயமரியாதைத் தீரர் காஞ்சி கல்யாணசுந்தரம்,
ஈரோட்டு வீரர் ஈ. வெ. கி. சம்பத்,
சென்னைத் தோழியர் சத்யவாணிமுத்து,

ஆகியோர் முறையே, திராவிடர் முன்னேற்றம், கல்வித் திட்டம், விடுதலைப் போர், அரசியல் திட்டம், மதமும் நாமமும், உணவுப் பிரச்சினை, தொழில் திட்டம், மூன்றாண்டு ஆட்சி, பெண்கள் கடமை என்னும் தனித்தனிப் பொருள்கள் குறித்துத் தத்தமக்குரிய தனி நடையில் அழகும் தெளிவும் அமைந்தவிதத்தில் விளக்கவுரை ஆற்றினர்.

பிற்பகல் நிகழ்ச்சியின் போது தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்ட பிறகு, **பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள்** திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை கோட்பாடுகளையும் வளர்ச்சி-எழுச்சி சிறப்புகளையும் தேனினும் இனிய தம் சொல்லோவியத்தின் மூலம் நன்கினிது விளக்கிக் காட்டினார்.

தலைவர் முடிவுரை நன்றிகூறலுடன் மாநாடு ஞாயிறன்று இரவு சிறப்புற முடிவுற்றது.

முதல் நாள் இரவு "சந்திர மோகன்" நாடகமும், இரண்டாம் நாள் இரவு 'நீதிதேவன் மயக்க" நாடகமும் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிக்கும் முறையில் நடைபெற்றபோது இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள், கடல் போல் வந்துகுழுமி நாடகத்தைக் கண்டு புத்தறிவும் புத்தெழுச்சியும் பெற்றனர்.

நாடகங்கட்கும் சரி, மாநாட்டிற்கும் சரி, பல்லாயிரக் கணக்கில் வந்து பேரார்வத்துடன் கலந்துகொண்ட பெண்கள் உலகத்தின் போர் ஆர்வத்தைக் கவனிக்கும்போது, திராவிடத் திருநாட்டின் விடுதலை விழாவினைக் கொண்டாடும் நாள் மிக விரைவில்தான் என்ற இன்ப உணர்ச்சி எவருக்கும் ஏற்படாமற் போகாது.

காஞ்சி மாநாடு, மகத்தானதோர் வெறிற்—திராவிடருக்கு!

ஆனல்,

அருமையானதோர் அபாய அறிகுறி—ஆட்சியாளர்களுக்கு!

ஆம்! அப்படித்தான் கூறிக்கொண்டு சென்றனர் மாநாட்டிற்கு வந்திருந்த ஆயிரமாயிரவரும்—தம் வீடுநோக்கித் திரும்பியபோது.

வாழ்க காஞ்சி!

வாழ்க காஞ்சி மாநாட்டைச் சிறப்புற நடத்தி வைக்கச் சீர் மிகு முயற்சிகள் புரிந்த இராம அரங்கண்ணல் !

வாழ்க ஈழத்தடிகள், சி. வி. எம். அண்ணாமலை மற்றுமுள்ள காஞ்சிபுரம் தளபதிகள்!

வாழ்க தோழர்கள் மணி—பஞ்சாட்சரம் ஆகிய தொண்டர் படைத் தலைவர்கள்.

வெல்க திராவிடம்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டனையடைந்து திருச்சி சிறையிலிருந்து வரும் கழக வீரர்களையும் இம் மாநாடு பாராட்டுகிறது.

(ஈ) அரசியலார் மேலும் மேலும் தங்களது அடக்குமுறை ஆணவத்தை இவ்விதமே கையாண்டு வருவார்களேயானால், செயற்குழு தீர்மானத்திற்கேற்ப தடை உத்திரவுகளை எதிர்த்துப் பொதுவாக மனித உரிமையை நிலைநாட்ட செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் உறுதியுடனிருந்து பணியாற்றுமென இம் மாநாட்டின்மூலம் உறுதி கூறுகிறது.

6. நமது சென்னை மாகாணத்தில் பெருவாரியாக நூல் தயாராகியும்பஞ்சுவாங்குவது முதல் நூல் விநியோகம் வரையுள்ள முழு உரிமையையும் அதிகாரத்தையும் இந்திய மத்திய ஆட்சி தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு, சென்னை மாகாணத்தின் முக்கியமான தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றிக் கவலையின்றியும் வட நாட்டுமில் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வெளிநாட்டு நாணய செலாவணியை நோக்கமாகவும் கொண்டு சென்னை மாகாணத்தில்உற்பத்தியாகும்நூலை தங்கள் இஷ்டம்போல் எதேச்சதிகாரமாக எடுத்துக்கொண்டுபோவதால், சென்னை மாகாண கைத்தறி நெசவாளிகள் நூல் கிடைக்காமல், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை மிகமிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளபடியால், சென்னை அரசாங்கம் உடனடியாக சென்னை மாகாண நூல் உற்பத்தி, விநியோக சம்பந்தமான பூரண பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாலொழிய நிலைமையை சமாளிப்பது சாத்தியமில்லையென்று இக்குழு சென்னை அரசியலாருக்கு அறிவுறுத்தலுடன் உடனடியாக இப்பிரச்சினையைக் கவனிக்கும்படி அரசியலாரை வற்புறுத்துகிறது.

7. தமிழ் நாட்டிலுள்ள, இரயில்வே நிலையங்களிலுள்ள ஊர்ப்பெயர் அறிவிப்புப் பலகைகளில், முதலில் இந்தியிலும், பிறகு ஆங்கிலத்திலும், இறுதியில் தமிழிலும் எழுதியிருக்கும் முறையை வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக இந்திப் பெயர்களை அகற்றிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

8. (அ) செங்கற்பட்[டு] மாவட்டத்துக்கு நீர்ப்பாசன வசதி, நல்ல முறையில் கிடை[க்]கும் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மேற்படி நீர்ப்பாசன வசதி சம்பந்தமாக, பல்லாண்[டு]களுக்குமுன்னதாகவே போடப்பட்ட பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தை இந்நாள்காறும் நிறைவேற்றுமல் காலதாமதப்[படுத்தி] செய்து வரும் சர்க்கார் போக்[கை]க் கண்டு இம்மாநாடு மிகமிக வருந்துவதோடு உடனடியாக நிறை[]வேற்றித் தருமாறு வேண்டிக் கொள்கிறது.

கருத்துக் கருவூலம் ! கவின்மிகு வெளியீடு !

"போர்வாள்" பொங்கல் மலர்

வேகவேகமாக அச்சாகி வருகிறது !

பொங்கற் புதுநாளன்று உங்களுடன் தங்கியிருக்க வருகிறது !

* அறிஞர் அண்ணுதுரையின் அரியதோர் எழுத்தோவியம்.
* புரட்சிக் கவிஞரின் சிறந்ததோர் புத்தமுது.
* பேராசிரியர் மு. வ. வின் எழில் ததும்பும் ஆராய்ச்சிக் கட்டுரை.

மற்றும்

செங்கரும்பு போன்ற சிறுகதைகள்,
தெவிட்டாத தேனனைய கட்டுரைகள்,
இன்பத் தென்றல் எனத்தகும் எழில்மிகு கவிதைகள்,
பகுத்தறிவுப் போர்வீரர்தம் வரலாறுகள்,
வைதீகத்தை வீழ்த்தும் வெடிகுண்டுகள்,

இவ்வளவும் உண்டு இந்த ஆண்டு மலரில் !

அழகிய பதிப்பு அரிய கருத்துத் தொகுப்பு !

விலை அணு எட்டு.

"போர்வாள்" அலுவலகம்

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சோறு என்று கூவிக் கதறி அழத்தொடங்கின.

"பதறினேன். துடித்தேன், பதைபதைத்தேன். கண்ணீர் வடித்தேன். ஐயகோ இதுவோ என் நிலை என்று கதறிக் கதறி அழுதேன். குழந்தைகள் அழ அழ அந்த அழுகையை நீக்க வழியின்றி கூடச்சென்று குந்தி அழுத என் நிலை என் உள்ளத்தை ஆயிரம் ஈட்டிகளால் குத்திக் குடைந்தது. உள்ளம் தூள் தூளாகச் சிதறி வீழ்ந்தது. நடமாடும் பிணமானேன்! உணர்ச்சியற்ற உடலானேன்!

"பட்டினித் தேள் கொட்டக் கொட்ட அதன் கொடுமையை ஆற்றாது துள்ளித் துள்ளி அழுதன குழந்தைகள். ஒருவிதமாகப் பொழுதும் சாய்ந்தது. குழந்தைகளும் தூங்கின. தூங்கின என்றா சொன்னேன்? தவறு! தவறு! தூங்கவைத்தேன்!

"தூங்கத் தொடங்குவதற்கு முன்னால், அக் குழந்தைகள், பரிதாபம் நிறைந்த குரலில், நயினு நாளைக்காச்சும் சோச்சி கிடைக்குமா நயினு என்று கேட்டன. அப்படி அவை கேட்டபோதும், நிச்சயமாகக் கிடைக்கும்-கவலையற்றுத் தூங்குங்கள் என்று தான் விடை கூறினேன்.

"விடை கூறினேன். ஆனால் விடை கூறுகிற அந்த வினாடியிலேயே எனக்குத் தெரியும் மறுநாளும் அதற்கு அடுத்த நாளும் அதற்கு அடுத்த நாளும்கூட குழந்தைகள் அந்தநாள் போலத்தான் பட்டினியால் அலறித் துடித்து அழுதுகிடக்க வேண்டுமென்பது.

"குழந்தைகள், பாயில்! எதிரே நான்! பசியின் பயங்கர முத்திரை அதுகளின் முகத்தில்! வறுமையின் கோர நடனம் என் உள்ளத்தில்! இவ்வண்ணமாக எவ்வவு நேரம் நான் தூங்கும் குழந்தைகளின் எதிரே கல்லாகச் சமைந்திருந்தேனோ எனக்கே தெரியாது. நீண்டநேரத்திற்குப் பிறகு திடீரென்று ஒரு கேள்விக்குறி என் மனத்தில் எழுந்தது "நாளைக்கு உணவு தருவதாக ஜம்பமாகக் கூறிவிட்டாயே குழந்தைகளிடம் — எப்படியப்பா தரப்போகிறாய் உணவு? எப்படி?" இந்தக் கேள்வி என் உள்ளத்தைக் குடையத் தொடங்கியதுதான் தாமதம், நான் பித்தம் பிடித்தவன் போலானேன், தலைமயிரைப் பிய்த்தெடுக்க முனைந்தேன், அப்படியும் இப்படியும் ஓடிஓடி வரலானேன், என் நினைவை நான் இழந்துவிட்டேன்.

என் நினைவை நான் மீண்டும் பெற்றபோது பழைய கேள்வி என் உள்ளத்தைவிட்டு மறைந்துவிட்டது; புதியதோர் கேள்வி அந்த இடத்தில் வந்து நின்றது. "குழந்தைகள் தினம் தினம் பட்டினியால் சித்திரவதை செய்யப்பட்டுச் சிறுகச் சிறுகச் செத்து மடியும் கோரக் காட்சியைக் காணவிருப்பமா? அல்லது, ஓரே வினாடியில் குழந்தைகள் மரணம் எய்தி, அவற்றின் துன்பங்கள் அவ்வளவும் அந்த அளவோடு முடிவெய்தி விடும் காட்சியைக்காண விருப்பமா?"—இதுதான் என் உள்ளத்தை உலுக்கத் தொடங்கிய புதிய கேள்வி.

"இந்தக் கேள்வி என் நெஞ்ச மேடையில் இடி முழக்கம் புரியத்தொடங்கிற்றோ இல்லையோ, உடனே என் உள்ளம் இரு கூறுகளாகப் பிரிந்து ஒன்றுடன் ஒன்று பெரியதோர் போராட்டம் நிகழ்த்தத் தொடங்கிவிட்டன.

உள்ளம் 1. என்னைப் பார்த்துக் கூறிற்று:—அருமையான நேரத்தை வீணாகப் போக்காதே! இதோ இப்படிப் பார்! இந்தக் குழந்தைகள் பசிக் கொடுமை தாளாமல் ஏங்கி அழுதுவிட்டுத் தூங்கியிருக்கும் கோராமையைப் பார்! இந்தக் கொடுமையைத் தினம்தினமுமா நடக்க அனுமதிக்கப் போகிறாய்! வேண்டாம்! வீணாக இக் குழந்தைகளைச் சித்திரவதை செய்யாதே! இன்றோடு இவற்றின் துன்பத்தை முடித்துவிடு! அதுதான் நல்லது.

உள்ளம் 2. சும்மா இருந்ததா இதைக் கேட்டுவிட்டு? இல்லை! அது உடனே கூறிற்று:— உள்ளம் 1 கூறுவதைக் கேட்காதே! அது மகாபாப காரியம். குழந்தைகளைக் கொல்லாதே! வேண்டாம் வேண்டாம்! கொலைச் செயல் புரிய வேண்டாம்! கொலை, பஞ்சமா பாதகங்களில் தலையாயது. கொலை, குற்றங்களிலெல்லாம் மிக மிகப் பெரியது.

உள்ளம் 1:—உள்ளம் 2 சொல்லுகிற வேதாந்தம் காதுக்கு இனிமையாகத்தான் இருக்கும். ஆனால் கவைக்குதவாது. கொலை, மிகப் பெரிய குற்றமாம்! இருக்கலாம்! ஆனால் சித்திரவதை அதைவிடச் சிறிய குற்றமா?

உள்ளம் 2: ஆயிரம் காரணம் இருந்தாலும் சரி, கொலை புரிவது கொடியசெயல். எனவே அது கூடாது கூடாது.

உள்ளம் 1: கொலை, தன்னளவில் கொடிய செயலாக இருக்கலாம். ஆனால் சித்திரவதையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, கொலை, எவ்வளவோ மேலான செயலாக மாறிவிடுகிறது இல்லையா?

உள்ளம் 1-க்கும் உள்ளம் 2-க்கு மிடையே நெடுநேரம் சொற்போர் நடந்தது. ஒரு வினாடியில் பார்த்தால், உள்ளம் 1 உரைப்பதுதான் உன்னத வழி என்று தோன்றும். அடுத்த வினாடியோ

(18-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவளோ சாதாரண மானிடப் பெண். அவளுடனா நீ சேர்வது? பூனையிடமா புலி சேர்ந்து விளையாடுவது? சேச்சே ...உதவாது....உதவாது.....இது உதவவே உதவாது.

[மகாராணி அஞ்சனா வருகிறாள்]

அஞ்: பூஜ்யரே! எது உதவாதென்கிறீர்கள்?

ஆல: [தடுமாற்றமுடன்] ஹூம்.... ஒன்றுமில்லை.... தங்கள் ... தங்கள் ..இளவரசி காஞ்சனா, நந்தவனத்தில் திலோத்தமாவுடன் பொழுதுபோக்கக் கூப்பிட்டனுப்பினதற்கு இவள் தனக்குத் தலைவலி என்று சொல்லித் தட்டிக்கழித்துவிட்டு வந்திருக்கிறாள். இதை என்னவென்று சொல்வது?

அஞ்: குருதேவா! திலோத்தமா குழந்தைதானே....வீணாகக் கோபிக்காதீர்கள்......பாவம் அவள் மிகவும் பயந்துவிட்டாள் ...திலோத்தமா......நீ அரண்மனை வைத்தியரை அழைதது உனது நோயை உடனே பார்த்துக்கொள்!

திலோ: அப்படியே செய்கிறேன் மகாராணி [போகிறாள்]

ஆல: மகாராணி......!

அஞ்: போதும் நிறுத்துங்கள்......இனியும் அந்தவீணை பட்டம் வேண்டாம். என்னுள்ளம் உவக்க உங்கள் [உதட்டைக் குவித்து முத்தம் கேட்கிறாள்]......

(அவனது மடியில் அமர்ந்து கொள்ளுகிறாள்)

ஆல: கண்மணி, கிணற்று நீரை வெள்ளமா கொண்டு சென்றுவிடும் ?.......பொறுமை கடலினும் பெரிது......!

அஞ்: நான் பாடங்கேட்க வரவில்லையே இங்கு...!

ஆல: ஆனால் கற்றுக் கொடுக்க வந்திருக்கிறாய்...ஏன் அப்படித்தானே!

(இருவரும் சிரித்தல்...இராஜகுரு திடீரென்று யோசனையில் ஆழ்ந்து விடுகிறான்...பின்பு...)

ஆல: ஏ, பாழும் மனமே... எதற்கும் கலங்காத கற்பாறையே......சாந்தியாயிரு...ஓம் சாந்தி......சாந்தி....சாந்தி...!

அஞ்: அன்பரே, ஏன் குழப்பமாகக் காணப்படுகின்றீர்கள்? என்ன விசேஷம்?

ஆல: அன்பே, என்னை மன்னித்துவிடு!

அஞ்: என்ன.. மன்னிப்பா எங்களுக்கும், நாட்டுக்கும் குருவான தங்களையா நான் மன்னிப்பது! கண்ணாளா வீணே என்னைச் சித்திரவதை செய்ய வேண்டாம். தயை செய்து உங்களது உள்ளத்தைத் திறந்து காட்டுங்கள்!

ஆல: (பெருமூச்சு விட்டு) ஹூம்......தேவி......என் உள்ளக் கோயிலின் கதவைத் திறக்கும் நாள் இன்னும் வரவில்லை. ஆனால் வேளை நெருங்கிவிட்டது! அதற்குத்திறவுகோல் ஒருவரிடமிருக்கிறது. அதைப் பெற்றாலொழிய நான் அக்கதவைத் திறக்க முடியாது!

அஞ்: நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

ஆல: சுருக்கமாகச் சொல்கிறேன், பூட்டியிருக்கும் என் உள்ளக் கோயிலின் கதவை நீ திறந்து பார்த்துப் பரவசமடைய வேண்டுமானால் மன்னன் என்னும் சாவி என்னைச் சார வேண்டும்!

அஞ்: அப்படி யென்றால்?

ஆல: அரசனின் ஆயுள் இகலோக ஏட்டிலிருந்து கிழித்தெறியப்பட வேண்டும். அதுவரை இந்த ஆத்மாவுக்குக் கொஞ்சமும் நிம்மதியில்லை...!

அஞ்: பாவம்! தள்ளாதவன்...அவருக்கா இந்தத் தண்டனை? வேண்டாம் நாதா... வேண்டுமானால் அவரைச் சிறையில் அடைத்துவிடலாம். கரும்புக்காட்டை எறும்புக் கூட்டம் அழித்துவிடுமென்று பயப்படுகின்றீர்?

ஆல: அஞ்சனா......சிற்றுளி சிறியதுதான்.......ஆனால் அது பெரிய மலையையே தகர்த்துவிடும் தெரியுமா உனக்கு? பல துளி...?

அஞ்: பெரு வெள்ளம்!

ஆல: ஹூம்......புரிந்ததா? பெருவெள்ளம் பெருகினால் நம் கதி என்னவாகுமென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்!

அஞ்: ஆம்...உண்மை...... முக்காலும் உண்மை! ஆஹா... நீர் அறிவின் பொக்கிஷம்...... ஆண்டவனின் அவதாரம்... மனிதருள் மாணிக்கம்...மாதர் போற்றும் மன்மதன்...!

ஆல: அஞ்சனா...கவிமழை பொழிந்தது போதும்...தயவு செய்து நிறுத்து....

[இருவரும் சிரித்தல் — அஞ்சனா ஆலவாயரை அணைத்து முத்தமிடல்]

ஆல: அஞ்சனா.........அரசனின் ஆயுளுக்கு இன்று உலை வைத்துவிட்டேன்! இந்நேரம் அந்தக் கிழக் கோட்டானின் ஆவி பறந்துபோயிருக்கும் [சிரித்தல்]

அஞ்: எப்படி?

ஆல: பதவி ஆசையைக் காட்டினால் சதிச் செயல்கள் புரிய மதியைப் பறிகொடுத்த மட்டிகளதானா இல்லை இந்த நாட்டில்!

அஞ்: யாரது...?

ஆல: அவன்தான் கருங்காலி கருநாகன் [காவலாளி]

அஞ்: குருதேவா இதைப் பொறுத்துச் செய்யக்கூடாதா?

ஆல: அஞ்சனா...உனக்கு வயதுதான் அதிகமாயிற்றே ஒழிய அரசியல் அறிவு கொஞ்சங்கூட வளரவில்லை! காற்றுள்ள போதுதான் நாம் தூற்றிக் கொள்ள வேண்டும். அஞ்சனா...நாம் பாஞ்சாலத்தில்

தீட்டிய திட்டத்தை மறந்து விட்டாயா? நீ எதற்காக இம் முல்லை நாட்டு மன்னனை மணந்தாய்? எனது பிரதம சீடனும், உனது தந்தையுமான பாஞ்சாலத்தின் ராஜகுரு ஜெகன்னாத ஸ்வாமிகளும், நானும், நீயும் அன்றுகூடித் தீர்மானித்ததை ஞாபகப்படுத்திக்கொள்! ஜெகன்னாத ஸ்வாமிகளின் புத்திரியான அஞ்சனாதேவி! பாஞ்சாலநாட்டு அரசனின் உதவியால், உன்னை அவனது புத்திரியெனப் புளுகியன்றோ முல்லைநாட்டு மன்னனுக்கு மணம் செய்து வைத்தது? ஏன்...? எதற்கு....தமிழ் நாட்டு மன்னர்களில் மிகவும் வலிமை வாய்ந்தவன் இந்த முகில் வண்ணன். மேலும், ஆரியத்தை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவன். ஒன்று, நம்மால் முடிந்தவரை அவனையும், அவனது மக்களையும், வைதீகத்தின் இரும்புச் சிறைக்குள் தள்ளி, மனுச்சட்டங்களென்ற விலங்குகளைத் தரித்து இம்சிக்க வேண்டும். இல்லையேல், அவன் இந்த லோகத்திலிருந்து தொலைய வேண்டும். இதுதானே நமது திட்டம்!

அஞ்: ஸ்வாமி, க்ஷமிக்க வேண்டும், அப்படித்தான் அரசன் தொலைந்தாலும் அவனது மகள் காஞ்சனா இருக்கிறாளே!

ஆல: கவலை வேண்டாம். இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. முறைப்படி அரசனுக்குப் பின் அரசிக்குத்தானே பட்டம்.

அஞ்: ஆனால், அரசர் வேறு ஏற்பாடு செய்துவிட்டால்?

ஆல: செய்யும்வரை விட்டு வைத்தால்தானே ஆபத்து!

அஞ்: குருதேவா...எனக்கு எல்லாம் ஆச்சரியமாகவே இருக்கிறது!

ஆல: எதைப்பற்றி?

அஞ்: இத் தீச் செயலைச் செய்ய கருநாகன் எப்படி ஒப்புக்கொண்டான்?

ஆல: அதில்தானிருக்கிறது சூட்சமம். செய்யவேண்டிய துரோகத்தைச் சாடையாகத் தெரிவித்தேன். தயங்கினான் ...பதவித்தேனை நாக்கில் தடவினேன்......பயல் நாயாகிவிட்டான்!

[இருவரும் சிரித்தல்—பின்பு...]

அஞ்: அன்பே....ஆபத்து ஏதாவது?

ஆல: ஒன்றும் நேராது... அஞ்சனா, இந்த ஆலவாயரின் ஆற்றலிலா உனக்குச் சந்தேகம்?

அஞ்: மன்னிக்கவும். நேரமாகி விட்டது, நான் வருகிறேன்......!

[அஞ்சனா போகிறாள்—ஆலவாயர் கூப்பிடுகிறார்]

ஆல: அஞ்சனா...

அஞ்: ஏன்....?

ஆல: இந்தக் காரியம் மட்டும் முடிந்து விட்டால் நீ மட்டும் சாவித்திரியாகவாவது—சந்திரமதியாகவாவது மாறத் தவறாதே!

அஞ்: [சிரித்துக் கொண்டே] ஒப்பாரியைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?

ஆல: ஆமாம்.......ஆமாம்!

அஞ்: என் நடிப்பு உண்மையைவிட ஒருபடி உயர்ந்தே இருக்கும்.

ஆல: மீன் குஞ்சுக்கு நீந்தவா கற்றுத்தர வேண்டும்? சென்றுவா அஞ்சனா........

(அஞ்சனா போகிறாள்—ராஜகுருவின் தனிப்பேச்சு)

என் ஆசைச் சூரியன் இன்னும் சில நாளைக்கு முன் உதயமாகிவிடுவான். பின்பு இந்நாட்டு மக்களும் பிறரும் என் அதரம் அசைந்தால் ஆடுவர்—பாடுவர். என்னைவிட பாக்யசாலி இப்பூவுலகில் எங்குமே இருக்கமாட்டான்! வேண்டுமட்டும் மது — மங்கை! இவ்விரண்டையும் பெற மதம் இருக்கவே இருக்கின்றது. எதிர்த்தால் எதை வேண்டுமானாலும் செய்ய அரசியல் அதிகாரம் கையிலிருக்கின்றது. பின்பு, நான் இட்டதுதானே பிச்சை இம் முல்லை நாட்டிற்கு! ஹா....ஹா....ஹா....[சிரித்தல்] ...ஜேய் சங்கர்!

அங்கம் 7

இடம்: அரண்மனையைச் சார்ந்த தோட்டம்.

[முல்லை நாட்டு மன்னன் முகில் வண்ணன் படுத்துக்கொண்டிருக்கிறான் நந்தவனத்தில். கருநாகன் ஒளிந்து வந்து, விஷத்தை அரசன் காதில் ஊற்றிவிட்டு ஓடுகிறான். அகஸ்மாத்தாக அங்கு வந்த திலோத்தமா இதைக் கண்டுவிடுகிறாள். கலக்கமடைகிறாள். அரசன் மரணக் கூச்சலை எழுப்புகின்றான். திலோத்தமா மறைந்துகொள்கிறாள். கூச்சலைக் கேட்டு கருநாகனும், சில போர்வீரர்களும் முதலில் ஓடி வருகின்றனர். பின்பு அதிக குழப்பம் ஆகிவிடவே அரசி, இளவரசி, மந்திரி, ராஜகுரு யாவரும் ஒருவர்பின் ஒருவராக ஓடிவருகின்றனர். திலோத்தமாவும் கலந்துகொள்கிறாள். இச் சதியில் யாரார் கலந்திருக்கிறார்களென்று அறியும்வரை, வெளியிடாதிருக்க நிச்சயிக்கிறாள். இளவரசி கதறுகிறாள் — அஞ்சனா ஒப்புக்கு ஓலமிடுகிறாள். ராஜகுரு போலிச் சமாதானம் சொல்கிறான்—பின்பு அரசனின் சவம் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது]

ஆல: ஜேய் சங்கர்! அரசனின் ஆவி அமரத்வம் அடைந்துவிட்டது. எல்லாம் விதியின் விளையாடல். நம்மாலாவது ஒன்றுமில்லை...மகாராணி இளவரசி...வீணாக வருந்தாதீர்கள்....அவரது ஆன்மா சாந்தியடையட்டும்!

(தொடரும்)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளம் 2 புகல்வதுதான் புனித மார்க்கம் என்று தெரியும். உள்ளம் 1 என்னை ஒரு புறம் நோக்கி இழுத்தது. உள்ளம் 2 அதே நேரத்தில் என்னை வேறொரு புறம் இழுத்தது. இந்த இரண்டு திசைகளுக்கிடையே மாறி மாறி ஊசலாடிக்கொண்டிருந்தேன் நீண்டநேரம் இறுதியில் உள்ளம் 1 தான் வெற்றி பெற்றது. குழந்தைகள் நாள்தோறும் வறுமை வாணலில் வதக்கப்பட்டு பட்டினித் தேளால் கொட்டப்பட்டு சிறுகச் சிறுகச் சாவதைவிட ஒரே விநாடியில் செத்துவிடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தேன். எதிரே அரிவாள் இருந்தது. முடித்து விட்டேன் காரியத்தை.

"நான் குழந்தைகளைக் கொன்றேன்—உண்மை! ஆனால் நான் குழந்தைகளைக் கொன்றதற்கான காரணம், அவை நித்திய பட்டினி என்ற கொடிய பாலைவனத்தில் சிக்கிச் சித்திரவதைப் படக்கூடாதே என்ற நல்லெண்ணம்தான்; அவை இந்த உலகத்தில் வாழக்கூடாது என்ற கெட்ட எண்ணமல்ல.

"நான் செய்துள்ள இரட்டைக் கொலைகளின் அடிப்படை, இரக்கம் — குரூரமல்ல! மனிதாபிமானம்— மதோன்மத்தத்தனமல்ல! பச்சாத்தாபம்—பாழும் வெறியல்ல! பச்சை அன்பு—நச்சு நினைப்பல்ல!

"பட்டினியால்படும் சித்திரவதை அல்லது துன்பமற்ற மரணம் இரண்டிலே எது என் குழந்தைகளுக்கு மிக அதிக வேதனையைத் தரும் என்பதை எண்ணிப் பார்த்தேன். பட்டினி வதைதான் மிக அதிக வேதனை தரும் என்று தெரிந்தது. எனவே என் குழந்தைகளை அந் நிலையிலிருந்து காப்பாற்றியிருக்கிறேன் மரணம் என்னும் வீட்டில் அவற்றை உலவச் செய்வதன் மூலமாக.

"நான் செய்திருப்பது கொலைதான்—அதற்கேற்ற சரியான தண்டனை தூக்குமேடைதான். இரண்டையும நான் மறுக்கவில்லை. ஆனால் நான் கொலை செய்ததற்கான அடிப்படைக் காரணம் இரக்கம்—இரத்தவெறி அல்ல. இதை மட்டும்தான் உங்களை ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தவறு நான் கேட்பது?"

இதே வாசகங்களை அல்ல, ஏறத்தாழ இவைபோன்ற வாசகங்களை, இவ்வளவு நீளமாக அல்ல—சற்றுச் சுருக்கமாக, இவ்வளவு அமைதியாகவும் நிதானமாகவும் அல்ல—வேகவேகமாகவும படபடப்பாகவும் எடுத்துக் கூறுகிறான் கூண்டிலே நிற்கும் கைதி.

கைதி பேசி முடித்ததும் நீதிபதி எழுந்திருக்கிறார். இந்த விசித்திரமான வழக்கிலே நீதிபதி எத்தகு தீர்ப்பை அளிக்க இருக்கிறார் என்பதை அளவற்ற ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர் திரளாகக் கூடியுள்ள வழக்கறிஞர்களும் பொதுமக்களும்.

நீதிபதி பேசத் தொடங்கினார்:—

"இது மிகவும் துரதிர்ஷ்டமான ஒரு வழக்கு. இந்த வழக்கில், கைதி, தன் சொந்தக் குழந்தைகளையே கொன்றிருக்கிறான். இதைக் கைதியே ஒப்புக்கொள்ளவும் செய்கிறான். கைதி கூறுவதைத் தவிர, வேறு பல சாட்சியங்களும் கைதி செய்த கொலையை நிரூபிக்கின்றன. ஆனால், கைதி, குழந்தைகள் மீது மட்டற்ற வெறுப்பு கொண்டிருப்பதால் அல்ல, அளவற்ற அன்பு கொண்டிருப்பதால்தான் அவற்றைக் கொலை செய்திருக்கிறான. அவற்றின் உடமைகள் எவற்றையேனும் பறிப்பதற்காக அல்ல, பசிக் கொடுமை தாளாமல் அவை சித்திரவதைப் படக்கூடாதே என்ற நல்லெண்ணம் காரணமாகத்தான் கொலைசெய்திருக்கிறான். அவனுடைய கிராமத்தில் அவனுக்குத் துணைபுரிபவர்கள் யாருமே இல்லை. எனவே அவன் மனம் உடைந்துபோய் செய்யத்தகாத செயலைப் புரிந்திருக்கிறான்.

"காரணம் எதுவாக இருந்தாலும் சரி, கொலை செய்தவனுக்குத்தண்டனை கொடுத்தே தீரவேண்டும் என்று சட்டம் தெரிவிக்கிறது. எனவே சட்டப்படி அவன் செய்துள்ள குற்றத்திற்குச் சட்டப்படி உள்ள ஜன்ம தண்டனையை விதிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தக் குறிப்பிட்ட வழக்கில் கைதி கொலை செய்ததற்கான காரணத்தை முன்னிட்டு, ஆட்சியாளர்கள், தண்டனையைக் குறைக்க வேண்டும் அல்லது தண்டனையே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று ஆட்சியாளர்களை வேண்டிக் கொள்கிறேன்."

நீதிபதி அளித்த தீர்ப்பு இது.

சட்டப்படி கைதி குற்றவாளியாகிறான்.

நீதிபதி சட்டப்படி நடக்க வேண்டியவர்.

எனவே, அவர், சட்டப்படி செய்யப்பட்ட குற்றத்திற்குச் சட்டப்படி உள்ள தண்டனையை அளித்திருக்கிறார்.

நீதிபதி வெறும் நீதிபதி மட்டுமல்ல—ஒரு தனி மனிதருமாவார்.

நீதிபதிக்கு சட்ட உள்ளம் இருப்பது போலவே, மனித உள்ளமும் இருக்கிறது.

எனவே அவர், மனித நீதிப்படி கைதி குற்றவாளி அல்ல என்பதை உணர்கிறார்.

ஆனால் அவர் நீதிபதி என்ற நிலையில் நிற்கும்போது மனித நீதியை நிலைநாட்டும் உரிமை அற்றவர். சட்டநீதியை நிலை

நாட்டும் உரிமை மட்டுமே அவ னுக்கு உண்டு.

மனித நீதியை நிலைநாட்டும் உரிமை, உரிமை மட்டுமல்ல கடமை, ஆட்சியாளருக்கு இருக்கிறது. ஆகவேதான் நீதி பதி ஆட்சியாளர்களைப் பார்த்து, சட்டப்படி விதிக்கப் பட்டுள்ள தண்டனையை மனித நீதிப்படி குறைத்து விடுங்கள் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறார்.

* * *

பிரஞ்சு நாவலாசிரியர் விக்டர் ஹூகோ எழுதிய "ஏழை படும் பாடு" என்ற நூலிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட நீதிமன் றக் காட்சி அல்ல நாம் மேலே பொறித்திருப்பது

கற்பனை ஓவியம் அல்ல!

உண்மை நிகழ்ச்சி!

நாட்டிலே நடந்திருப்பது!

வேறு எந்த நாட்டிலோ அல்ல, இந்த நாட்டில்தான், வேறு எந்தக் காலத்திலோ அல்ல, நம்முடைய காலத்தில் தான் இந்த விபரீத நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத் தில், பொட்டி ரெட்டிபள்ளி என்ற சிற்றூரில், சங்க கவுண் டன் என்றோர் தோழர் வாழ்ந் திருந்தார். அவர்தான், பட்டி னிக் கொடுமை தாளாமல் தன் இரு குழந்தைகளையே கொன்று விட்டு அதன் காரணமாக நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டவர்.

இராஜாமாயி

சந்திரப் பிரகாசம்

இவை இரண்டும்தான் கொலை செய்யப்பட்ட குழந்தைகளின் இயற் பெயர்கள்.

வழக்கு, செஷன்ஸ் கோர்ட் டுக்கு வந்தபோது செஷன்ஸ் நீதிபதி அளித்த தீர்ப்பையும், அவ்வமயம், குற்றவாளி சங்க கவுண்டர் தெரிவித்துக் கொண்ட தன் கருத்துரையை யும் தான் நாம் மேலே தந்துள் ளோம்.

"சங்க கவுண்டன் ஒரு கொலைகாரன்"

"சங்க கவுண்டன் ஒரு மாபாவி"

"சங்க கவுண்டன் பெரும் பாதகன்."

"சங்க கவுண்டனு அவன் ஒரு சண்டாளனாயிற்றே! கொலை செய்யவும் அஞ்சாத கொடியவ னாயிற்றே அவன்!"

"சங்க கவுண்டன்தானே! அவன் பெயரை உச்சரித்தால் கூட நமக்கு ரௌரவாதி நரகம் தான் கிட்டும். வேண்டாம். அவன் பெயரை உச்சரிக்கவே வேண்டாம்."

இப்படிபெல்லாம் பேசுவர் பொதுமக்களிற் பலர். இப்படிப் பேசுவது எளிதுகூட. இத்தகு பேச்சினை நிகழ்த்துதற்குப் பெரி யதோர் திறமையோ அறிவாற் றலோ தேவையில்லை. எவரும் செய்யக்கூடிய எளிய செயல் இது.

"சங்க கவுண்டன் ஏன் கொலைகாரனானன்?"

"அள்ளி எடுத்து அணைத்து முத்தமிட்ட கைகளாலேயே அரிவாளை வீசிக் குழந்தைகளைக் கொல்லவேண்டிய நிலை ஏன் ஏற் பட்டது?"

"சங்க கவுண்டர் என்ற மதிப்போடு உலகில் உலவிக் கொண்டிருந்தவரை கொலை செய்த கைதி என்ற சிறுமைப் பட்டத்தோடு சிறைச்சாலையில் பவனி வரச் செய்தது எது?"

"சங்க கவுண்டரை வறுமை யும் பட்டினியும் வாட்டாமல் இருந்திருந்தால், அவர், இத் தகு குற்றம் செய்தாக வேண் டிய நிலைமைக்கு உள்ளாகி யிருக்க மாட்டார். எனவே உண்மைக் குற்றவாளி, சங்க கவுண்டரல்லர் — சங்க கவுண் டரைக் கொலை செய்தாக வேண் டிய நிர்பந்தத்துக்கு உள்ளாக் கியது சமுதாயம்தான்."

இப்படியெல்லாம் உரையாட மாட்டார்கள் மக்கட் கூட்டத் திற் பெரும்பான்மையோர்.

சங்க கவுண்டன் ஒரு கொலை காரன் — இதைப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

ஆனால்,

"சங்க கவுண்டன் ஏன் கொலைகாரனானன்?" — இந்தக் கேள்விக்குறியை எழுப்பும் தைரியம் இன்னமும் மக்கள் மன்றத்தில் உருவாகவில்லை.

இந்தக் கேள்விக் குறியை எழுப்பினால், நமக்குக் கிடைக் கிற விடை இருக்கிறதே அது, நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டையாளும் பொறுப்பை யும் கடமையையும் ஏற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியாளர் கட்குக்கூட ஏராளமான புதிய பாடங்களைப் புகட்டும் போதகா சிரியனாக இருக்கும். ஆம்! நிச் சயம்!

வேலையில்லாத் திண்டாட்டம் — பயங்கரமானதோர் பிரம் மாண்டமான இயந்திரம்.

அந்த இயந்திரத்திலே சிக்கிக் கொண்டவர்களிற் பலர், அதிற் சிக்கிச் சிதைந்தபிறகு, பலவகை யான புது வடிவம் பெற்றுவிடு வர்.

அவர்கள், கொஞ்சம் அசட்டு தைரியமும் முரட்டுத் துணிச்சலும் படைத்தவர்களா யிருந்தால் திருடர்களாகிவிடு துண்டு.

அவர்கள், அசட்டுத் தைரிய மும் முரட்டுத் துணிச்சலும் படைத்தவர்களாக இருப்ப தோடு, கொஞ்சம் கொடுமை மனப்பான்மையும் படைத்த வர்களாக இருந்தால், பிறர்தம் உயிரைக் கவர்ந்தேனும் அவர் தம் பொருளைக் கைப்பற்றுவது என்ற நிலைக்கு வந்து விடுவ துண்டு.

அவர்கள் கோழைத்தனம் கொண்டவர்களாகவும், தங்க ளால் இருக்குத் துன்பம் நேரி டக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர்களாகவு மிருந்தால் தற்கொலை செய்துகொண்டு தங் கள் வாழ்க்கையையே இந்த உலகிலிருந்து கத்தரித்துக் கொள்வதுண்டு.

அவர்கள் சோம்பல் உணர்ச்சி மிக்கவர்களாகவும், உழைக்காமல் உண்ண வேண் டும் என்ற உன்னத நோக்கம் படைத்தவர்களாகவு மிருந்தால் பிச்சைக்காரர்களாகிவிடுவ துண்டு.

அவர்கள் பெண்களாக இருந்து, கண்டாரைக் கொல் லும் கட்டழகு படைத்தவர் களாகவும் இருந்து, போற்றி வளர்ப்பவர்களோ ஆதரித்துக் காப்பவர்களோ யாரும் அற்ற வர்களாக இருந்தால் விபசாரிக ளாக மாறிவிடுவதுமுண்டு.

திருட்டு
கொலை
கொள்ளை
தற்கொலை
பிச்சையேற்றல்
விபசாரித்தனம்

ஆகிய சமுதாயக் கொடுமை கள் பலவற்றையும் உருவாக்கும் ஊற்றாக இருப்பது வேலையில் லாத் திண்டாட்டம் என்ற அந்த "அரும் பெரும்" பொரு ளேயாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் சமுதாயத்தைவிட்டு அகற்றப் படுமானால்,

* திருட்டு, பெருத்த அள வுக்குக் குறைந்துவிடும்.

* கொலைக் குற்றங்களின்எண் ணிக்கை மிகமிகத்தேய்ந்துவிடும்.

* கொள்ளைக்காரர்களின் பட் டியல் வெகுவாகச் சுருங்கிவிடும்.

* தற்கொலை புரிவோரின் சகாப்தம் நிச்சயம் முடிவெய்தி விடும்.

* பிச்சைக்காரர்களின் 'தொல்லை' சமுதாயத்தைவிட்டு நீங்கிவிடும்.

* விபசாரித்தனத்தைத் தொழிலாகக் கொள்வோர் தொகை மங்கி மறைந்துவிடும்.

* சிறைச்சாலைகள் பலவற் றிற்கு அவசியமே இல்லாமல் போய்விடும்.

* போலீஸ் படைவரிசை களின் எண்ணிக்கை முக்கால் பகுதிக்குமேல் தேவையற்ற நிலை மைக்கு உள்ளாகிவிடும்.

ஆம்! வேலையில்லாத் திண் டாட்டம் நாட்டுப் பொதுவாழ் விலிருந்து கல்லி எறியப்பட்டு விடுமானால் அதன் பிறகு "சங்க கவுண்டர்கள்" தோன்றமாட்டார் கள். வறுமை காரணமாக சில பலர் தங்கள் குழந்தைகளைத் தாங்களே கொன்றுவிட்டுக் குற்றவாளிகளாகக் கூண்டேற வேண்டிய நிலையும் ஏற்படாது.

* * *

* உண்பதற்குப் போதுமான உணவு.

* உடுப்பதற்குத் தேவையான உடை.

* இருப்பதற்கு வசதியான வீடு.

* வாழ்வதற்கு வேண்டப் படும் அடிப்படை வசதிகளாகிய கல்வி,

* மருத்துவம்.

இவ் வைந்தும், நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் கிடைக்கும் படி பார்த்துக் கொள்வதுதான் ஒரு நாட்டையாளும் ஆட்சியா ளர்களின் முதற்பெருங் கடமை யாகும்.

இந்த வசதிகள் ஐந்தையும் எந்த ஆட்சி குறைவறத் தேடித் தருகிறதோ அந்த ஆட்சிக்குத் தான் நல்லாட்சி என்று பெயர்.

அத்தகு ஆட்சிக்குத்தான் நெடுநாள் நிலைத்திருக்க உரிமை உண்டு.

இந்த வசதிகள், ஐந்தும் எல்லா மக்களுக்கும் குறைவறக் கிடைக்கவேண்டுமானால் எல்லா மக்களுக்கும் வேலை கிடைத் தாகவேண்டும். எல்லா மக்க ளுக்கும் வேலை கிடைத்தால் மட்டும் போதாது. அப்படிக் கிடைக்கும் வேலையிலிருந்து அவர்கள் பெறுகிற ஊதியம் இந்த ஐந்து வசதிகளையும் அவர்களுக்குப் போதுமான அளவுக்குத் தேடித்தருகிற தன்மை படைத்ததாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டு நிலைமைகளை யும் நாட்டில் உருவாக்கிவிட் டால் அதன்பிறகு "சங்க கவுண்டர்கள்" நம்மிடையே தோன்ற மாட்டார்கள், நிச்ச யம்.

ஆனால் இந்த இரு நிலைகள் உருவாகும் வரை..........?

அவர்கள் தோன்றிக்கொண்டு தான் இருப்பார்கள்—புதுப்புது வடிவில்! புதுப்புது நிலையில்!

* நாட்டுமக்கள் எல்லோருக் கும் வேலை

* நாட்டுமக்கள் எல்லோருக் கும் போதுமான வாழ்க்கை வசதிகளைத் தரவல்ல ஒரு குறைந்த பட்ச ஊதியம்

இந்த இரு நிலைகளை உரு வாக்காமுன்னர் சங்க கவுண் டர்களைப் பார்த்துக் குற்றவாளி கள் என்று கூறுவது சட்டப் படி சரியான வாதமாக இருக் லாம். ஆனால் மனித நீதிப்படி முறையான கருத்தாக ஆகாது.

* * *

இப்போது கூறுங்கள்!

வெளியே சொல்ல விருப் பில்லாவிட்டால் உங்கள் உள் ளத்திற்கு மட்டுமாவது கூறுங் கள்!

கொலைதான் புரிந்தார் சங்க கவுண்டர்! ஆனால் அவர் கொலைகாரரா?

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar Free Printers 147, C al Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)